உ

கடவுள் துணை.

# செந்தமிழ்.

தொகுதி-கஎ.] சித்தார்த்தி௵ ஆவணி௴ [பகுதி ௧௦.

Vol. XVII. August—September, 1919. No. 10.

## பேராசிரியருரையும் அண்மைவிளியும்.

"அண்மைச்சொல்லே யியற்கையாகும்" என்ற தொல்காப்பியச் சூத்திரத்தால் உயர்திணை மெய்யீற்றுச் சொற்களுக்கும் அண்மை விளி விதிக்கப்பட்டதென்ற அடியார்க்குநல்லார் கொள்கையை ஆக்ஷேபித்துத் திருவனந்தபுரம் நண்பர் ஸ்ரீமத் வையாபுரிப்பிள்ளையவர்கள் (பி. ஏ. பி. எல்.) எழுதிய ஒருதலை முடிவும், அதற்கு மறுதலைமுடிவும் சென்ற ஆனிமாதச் செந்தமிழில் வெளியிடப்பட்டன. அவற்றை நோக்குவார்க்குப் பேராசிரியருரையும்; இலக்கியப் பிரயோகங்களும் பெரிதும் பயன்படுமாதலால் அவை இங்குக்காட்டப்படுகின்றன.

பேராசிரியருரைவருமாறு:—

"அண்மைச்சொல்லேயியற்கையாகும்."

"இத்திணைக்கண்வரும் எல்லாவீற்றுப்பெயரும் அண்மைக்கண் விளியேற்குமாறுணர்............ற்று. இச்சூத்திரம் முன்னும் பின்னும் நோக்கி நிற்றலிற் சிங்கநோக்காகிக் கிடந்ததெனக்கொள்க. மேற் சொல்லப்பட்ட உயிரீற்றுப்பெயரும், இனியோதுகின்றபுள்ளியீற்றுப் பெயரும் அண்மைக்க ணியல்பாகி விளியேற்கும். னகரவீறு சிறப்பு விதி பெறுதலின் அஃதொழிந்தேனைய கொள்ளப்படும். நம்பிவாழி, நங்கைவாழி, வேந்துவாழி, கோவாழி; மாதர்கூறு, அண்ணல் கூறு, தம்பிகூறு, அன்னக்கூறு, கானல்கூறு, எனவரும் பிறவுமன்ன. "ஆவு மானியற் பார்ப்பனமாக்களு" மென்பது மண்மைவிளி."

இப்பேராசிரியருரையால் "அண்மைச்சொல்லே யியற்கையாகு" மென்ற சூத்திரம் சிங்கநோக்கு நிலையுடையதென்றும் மெய்யீற்றுச் சொற்களுக்கும் உரியதென்றும் வெளிப்படையாயறியப்பட்டது.

ஆதலால் அடியார்க்குநல்லார் கொள்கை தவறென்று சொல்லற்கிடமில்லை. ஆயினுமிவ்வுரையுள் "னகரவீறு சிறப்புவிதி பெறுதலால் அஃதொழிந்தேனைய கொள்ளப்படும்" என்றவாக்கியம் அடியார்க்கு நல்லார் காட்டிய "கடல்வண்ணன்" என்னும் உதாரணத்தையே ஆக்ஷேபிப்பதாயிருக்கிறது. அவ்வுதாரணம் அடியார்க்கு நல்லார் பிரயோகித்த தல்லாமையானும், தொன்றுதொட் டடிப்பட்ட வழக்காகப் பயின்றுவருதலானும், இலக்கியங் கண்டதற்கிலக்கண மியம்பல் முறையாமாதலானும், அடியார்க்குநல்லர் கூறியது தவறென்று துணிதல் கூடாது. பேராசிரியர் இலக்கணநூலிற்குஉரையெழுதியவராதலாலும், ஏதோகாரணங்காட்டி வரைதலாலும் அவர் சொல்வதையும் தவறென்று தள்ளுதல் கூடாது. ஒன்றற்கொன்று மாறுபட்டதாதலால் இருவர்கொள்கையும் பொருந்துமென்று மதபேதங்கொள்ளவும் இடமில்லை. ஆதலாலிதனை இங்கு ஆராய்ச்சி செய்தே முடிவறிய வேண்டும்.

பேராசிரியருரையிற் சொல்லியகாரண மென்னவென்பதை முதலில் விசாரிப்போம்.

அதில், "னகரவீறு சிறப்புவிதி பெறுதலால் அஃதொழிந்தேனைய கொள்ளப்படுமென்றிருக்கிறது. அச்சிறப்புவிதியாவதியாது? னகரவீறுபற்றி யண்மைவிளியில் ஒருசிறப்புவிதியும் விதிக்கப்படவில்லையே. அச்சிறப்புவிதியே யில்லாதபோது அதனால், "அஃதொழிந்தேனைய கொள்ளப்படும்" என்னுந்துணிவு பிறக்கமாட்டாதாதலாலது பிரமாணமாகுமாறில்லை.

இனி "அண்மைச் சொல்லிற் ககரமாகும்" என்பது அண்மைவிளிபற்றியதாமாயினும் அது அன்னீறு பெற்ற சிறப்புவிதியாமேயல்லது னகரவீறு பெற்ற சிறப்புவிதியாவதில்லை.

அது னகரவீறு பற்றிய சிறப்புவிதியாமாயின் சேரமான், மலையமான், எங்கோன், தலைமகன், முதலிய னகரவீற்றுப்பெயர்களை யெல்லாம் அகரவீறாகத்திரித்து இலக்கியத்தைச் சிதைக்குமெனவறிக.

அன்றியும் "அன்மைச்சொல்லிற்ககரமாகும்" என்னுஞ் சூத்திரத்துப் பேராசிரியருரையினும் அது சிறப்புவிதி யென்றெழுதப்படவில்லை; புறநடையென்றே யெழுதப்பட்டிருக்கிறது அவ்வுரை வருமாறு:—

(௰௨) "அன்மைச்சொல்லிற்ககரமாகும்."

"எய்தியது விலக்கி மேலதற்கோர் புறநடை யுணர்த்துதல் நுதலிற்று. அன்னென்னுமீறு மன்மைக்க ணகரமாகி விளியேற்குமென்றவாறு. அன்னென்பது அதிகாரத்தான் வந்தது. சோழ, சாத்த, வெற்ப, எனவரும்"

இவ்வுரையுள் எய்தியது விலக்கி என்றது நிகழும் அதிகாரத்தால் அன்னீற்றுக்குப் பொதுமையினெய்திய ஆகாரமாதலை விலக்கியென்று பொருள்படுவதல்லது, கழிந்த அதிகாரத்தால் எல்லாவீற்றுக்கும் பொதுமையான் எய்திய அண்மையியல்பை விலக்கி என்று பொருள் படமாட்டாது. மேலதற்கோர் புறநடையுணர்த்துதல் நுதலிற்று என்றதில் மேலது என்றது கழிந்த அண்மை இயல்புவிதியாகிய அண்மைச் சொல்லே யியற்கையாகும் என்ற சூத்திரத்தையே குறிப்பதாயிருக்கிறது. புறநடைவிதி யென்பது யாண்டும் பொதுவிதியைப் பாதிக்குஞ் சிறப்புவிதியாகாது, ஒரு விதியின் புறமே நடைபெற்று வரும் (அநுபந்தம்போல் வரும்) விதியாயமைவதாம். ஆதலால் அன்னீறு அண்மைவிளியி லியல்பாதலுடன் அகரமாகத்திரிதலுமுளவாம். என்பதே பேராசிரியர் கருத்தாகவேண்டும். இங்ஙனங்கொள்ளாது அண்மையியல்பை விலக்கி ஆகாரத்திரிபுக்குப் புறநடையாயிற்றென்றால் அன்னீறெல்லாம் அண்மைக்கண் ஆகாரத்திரிவும் உடன்பெற வேண்டுமாதலானும், அண்மைச்சொல்லே யியற்கையாகும், என்ற சூத்திரமும், இதுபோலெல்லா வீற்றுக்கும் புறநடையாக வேண்டுமாதலானும், அது பொருந்தாதெனவறிக. அன்றியும், 'முன்னும் பின்னும் நோக்கி நிற்றலிற் சிங்கநோக்காகிக் கிடந்தது' என்று அவர் தாமே யெழுதிய சிங்கநோக்கும்; அன்னீற்றால் இடையிட்டு மறைக்கப்பட்டிறவிற்றிலும் செல்லாதொழியும். இடையிட்டுச் செல்வது சிங்க நோக்காகாது; அது தவளைப்பாய்த்தாம். இன்னோரன்ன பல பிழைபாடுகளுக்கிருப்பிடமாகி முன்பின் முரணுதலால் அவ்வாக்கியம் பேராசிரியராலெழுதப்பட்டதாயிருக்க மாட்டாதென்றும், அகரத்திரிபுவிதி

அண்மையியல்பு விதிக்குச் சிறப்புவிதியாமென் றெண்ணி அறியாதா ரெழுதிய இடைச்செருகலான போலியுரையாயிருக்கவேண்டுமென்றும் தோன்றுகின்றது. உரையாசிரியருரையினும் இவ்வாறான இடைச் செருகல்களையெல்லாம், சேனாவரையர் போலியுரையென்று நிறுவுத லானும் அறிக. அன்றியும் உதாரண வாக்கியங்களில், நம்பிவாழி நங்கைவாழி, வேந்துவாழி, கோவாழி, பிறவுமன்ன. என்பவையொழிய மற்றவை யெல்லாம் அடிப்பட்ட வழக்கன்மையானும், அவற்றை ஈண்டமைத்தற்கேற்ற குறிப்பொன்று மின்மையானும், பேராசிரியர்க் குடன் பாடல்லாத பிறவீற்றுட் சேர்ந்த மகரவீறுமுடன்கொண்டு, அண்ணங்கூறு என்று உதாரணங் காட்டப்பட்டமையானும்,இன்னோ ரன்னவை யெல்லாம் விளிமரபிற் கொள்ளாது அதிகாரப்புறநடையா லவரமைத்தலானும் அவையுமிடைச் செருகலேயென்றறியற்பாலன.

ஆதலாற் பேராசிரியர் கொள்கையும் அடியார்க்கு நல்லார்கொள் கையும் சிறிதும் வேறுபாடின்றியே ஒன்றாயிற்றென்பது வெளிப்படை யாயிற்று. இச்சூத்திரம் முன்னும் பின்னும் நோக்கி நிற்றலிற் சிங்க நோக்காகிக்கிடந்ததென்று பேராசிரியர் வெளிப்படையாகச் சொல்லி யிருப்பதாற் பிறவுரையாசிரியர் குறிப்புக்களும் இதற்கு விரோத மின்றியனுகுணமாயிருக்கவேண்டுமென்றறியத்தகும்.

இனி இலக்கியப் பிரயோகங்களையும் சிறிது காண்போம்.

## சிவகசிந்தாமணி.

(2121) தேமலரங்கட்டிருவே! புகுதக
மாமலர்க்கோதைமணாளன்! புகுதக
காமன்புகுதககாளை! புகுதக
காமவெழில்விஞ்சைநம்பி! புகுதக.
மின்றேய்வரைகொன்றவேலோன்! புகுதக
இன்றேன்கமழ்தாரியக்கன்! புகுதக
வென்றோன்! புகுதகவீரன்! புகுதக
என்றேநகரம்எதிர்கொண்டதுவே.

இதனுள் திரு, காளை, நம்பி என மூன்றுயிரீற்றுச் சொற்களும், மணாளன், காமன், வேலோன், இயக்கன், வென்றோன், வீரன், என ஆறுனகரவீற்றுச்சொற்களும் அண்மைவிளியில் இயல்பாய்வந்தன. இனி வருவனவற்றையும் இவ்வாறே பகுத்தறிந்துகொள்க.

## சிலப்பதிகாரம்—முன்னிலை பரவல்.

(ஆய்ச்..குரவை 1) "கடல்வண்ணன்!... கலக்கினையே" (னகரவீறு)

( ஷை 2 ) "வண்டுழாய் மாலையாய்!... மருட்கைத்தே" (ஆய்)

( ஷை 3 ) "திரண்டமரர் தொழுதேத்துந் திருமால்!... (ல்)

( ஷை ஷை ) "மடங்கலாய் மாறட்டாய்! மாயமோ" (ஆய்)

(பதிகம் 62) "அடிகள்! நீரேயருளுகென்றற்கு" (ளகரவீறு)

இவற்றுள் திருமால் "என்பது அயனெடிதாயி னியற்கையாகும்" என்னும் சூத்திரத்தால் வந்த இயல்புவிளியன்று. (சொசுருபிஷா நியாயத்தால்) அண்மைச்சொல்லே யியற்கையாகுமென்பதனால் வந்த அண்மைவிளியென்பதாம்.

(வஞ்சிக்காண்டம் 30-70)

பாசண்டன் யான் பார்ப்பனிதன்மேல் மாடலமறையோன்! வந்தேனென்றலும். (ன்)

## மணிமேகலை.

(1—57) ஆறறிமரபி னறிந்தோர்! செய்புமின். (ர்)

(1—60) ஒட்டிய சமயத்துறுபொருள் வாதிகள்!
பட்டிமண்டபத்துப் பாங்கறிந்தேறுமின் (ள்)

3—92) வந்தீரடிகள்! நும்மலரடி தொழுதேன் (ள்)

(5—41) யாங்ஙனம் வந்தனை என்மகள்! என்றே (ள்)

(10—23) மடந்தை மெல்லியல்! மலரடி வணங்குழி (ல்)

(10—29) மெல்லியல்! கண்டனை மெய்ந்நடுக்குற்றனை (ல்)

(12—33) பொற்றொடி மாதர்! நற்றிறஞ்சிறக்க (ர்)

(18—87) அத்திறம் விடுவா யரசிளங் குரிசில்! (ல்)

(18—97) கேட்டுமறிதியே வாட்டிறற் குரிசில்! (ல்)

(20—69) வஞ்சந்தெரியாய் மன்னவன் மகன்! என (ன்)

(25—132) பெருமகன்! காணாய் பிறப்புணர்விக்கும் (ன்)

(28—93) தையல்! கேள்நின்றாதையுந் தாயும் (ல்)

(இங்கு ன ர ல ள வென்னும் நான்கு மெய்யீற்றுச் சொற்களும் அண்மையியல்புவிளி யேற்றன).

## புறநானூறு.

(18—4) "ஒருதாமாகிய உரவோரும்பல்!" (ல்)
(42—1) "ஆனுவிகை யடுபோரண்ணல்!" (ல்)
(130—1) "விளங்குமணிக் கொடும்பூணாய்! நின்கானத்து" (ய்)
(135—13) "மலைகெழுநாடன்! மாவேளாய்!" (ன், ய்)
(203—6) இன்னாதம்ம வியறே ரண்ணல்! (ல்)
(210—12) விடுத்தேன் வாழியர் குரிசில்! உதுக்காண் (ல்)
(211—6) "அரசுபடக்கடக்கும் உரைசால் தோன்றல்!" (ல்)
(227—1) நனிபேதையே நயனில் கூற்றம்! (ம்)
(230—11) நீயிழந்தனையே யறனில் கூற்றம்! (ம்)

இங்கு நான்கீற்றுளடங்காத மகர யகர வீற்றுப்பெயர்களும் அண்மைவிளியேற் றியல்பாயவாறு காண்க.

## மதுரைக் காஞ்சி.

(61) "பொலந்தார்மார்பி னெடியோ னும்பல்!" (ல்)
(151) மேம்பட மரீஇயவெல்போர்க்குரிசில்! (ல்)
(207) கொன்னொன்று கிளக்குவல் அடுபோரண்ணல்! (ல்)

## திருமுருகாற்றுப்படை.

(251 முதல் 274)இங்கு, குழவி! வெறுக்கை! சொன்மலை! சேய்! வேள்! இயவுள்! மதவலி! குரிசில்! என, ல் ள் (ய்) இ ஐ என்ற மெய் யீறும் உயிரீறும் வேறுபாடின்றி அண்மைவிளியேற் றியல்பாயின. இங்குள்ள விளிகளுள், சாதாரண விளிகளை வேறுபிரித்துத் தொகுத் துச் சொன்முடிவு செல்விய உரைநடையில், அண்மை விளிகளும் ஒரு சில்விரவி எண்ணப்பட்டிருப்பவை ஆராயத்தக்கன. அவை அவ்வாறு விரவியடுக்கலாகா என்பதே அவ்வுரைநடையால் வெளியாகிறது.

## கலித்தொகை.

(80—9) "வருகவெம்பாக மகன்;"

இதனுரையில், மகனே! எனக்கண்ணழித்துரையாது மகன்! என்றே கண்ணழித்தமையால் இது அண்மைச்சொல்லே யியற்கையா குமென்பதனால் வந்த னகரவீற்று அண்மை யியல்புவிளியென்பதே நச்சினார்க்கினியர்க் குடம்பாடாதலால், அடியார்க்கு நல்லார்கொள் கையே அவர்க்கும் உடம்பாடாயிற்று என்றறியலாம்.

## பரிபாடல்.

(2—49) போரடுகுரிசில்! நீயேந்தியபடையே (ல்)
(3—36) நாற்கை யண்ணல்! (ல்)
(3—37) அறுகை நெடுவேள்! (ள்)
(3—38) எண்கை யேந்தல்! (ல்)
(3—40) நூற்றுக்கை யாற்றல்! (ல்)
(3—43) நூறுயிரங்கையாறறி கடவுள்! (ள்)

## இயற்பா (2-ம் திருவந்தாதி பூதத்தார்.)

(97) எங்கள் பெருமான்! இமையோர் தலைமகன்! நீ
செங்கணெடுமால்! திருமார்பா—பொங்கு
படமூக்கிலாயிரவாயப் பாம்பணைமேற் சேர்ந்தாய்
குடமூக்கிற் கோயிலாக்கொண்டு.

## திருவாய்மொழி (சடகோபர்).

(6—2—10) இன்றிவ் வாயர்குலத்தை வீடுய்யத் தோன்றிய கருமாணிக்கச்சுடர்! நின்றன்னால் நலிவே படுவோ மாய்ச்சியோமே.

(6—9—6) மாயோன்! உன்னைக்காண்பான் வருந்தியெனைநாளும் தீயோடுடன்சேர் மெழுகாயுலகிற் றிரிவேனோ.

(6—9—10) மறுகாலின்றி மாயோன்! உனக்கே யாளாகும், சிறு காலத்தையுறுமோ அந்தோ தெரிகிலேன்.

(7—2—8) கோழுந்து! வானவர்கட்கென்னும் குன்றேந்திக்கோ னிரை காத்தவன்! என்னும், அழுந்தொழும் ஆவியனல வெவ்வுயிர்க்கும் அஞ்சனவண்ணனே! என்னும்

(2—7—8) வாமனன்! என் மரகதவண்ணன்! தாமரைக்கண் ணினன்! காமனைப்பயந்தாய்! என்றென்று உன்கழல்பாடியே பணிந்து

என, ஏனைமெய்யுயிரீற்றண்மை விளியுடன் னகரவீற்றண்மை விளி பலவந்தவாறு காண்க.

## கம்பராமாயணம் (எழுச்சிப்படலம்).

(6 பாட்டு) "துன்றியகனைகழற் றூதர்! கொள்கெனப், பொன்றிணிகலன்களும் தூசும் போக்கினான்".

## கலிங்கத்துப்பரணி கடைதிறப்பு.

(1) "கடலமுதனையவர் திறமினோ!"
(3) "பனிமொழியவர்! கடைதிறமினோ"

(21) "மலைநாடியர்! துளுநாடியர்! மனையிற் கடைதிறமின்"

(28) "உருவு மதர்விழியுடையவர்! திறமினோ"

(34) "அதரபானமது பானமாகவறி வழியுமாதர்! கடை திறமினோ"

(36) "கருங்கண்வேதுபட வொற்றிமென்கைகொடு தட்டு மாதர்! கடைதிறமினோ"

(37) "அளக வனிதையர்! அணிகடைதிறமினோ"

இங்கு பன்மைக்கேற்ற ரகரவீற்று அண்மைவிளி பலவந்த வாறு காண்க.

முத்துக்குமாரசுவாமிபிள்ளைத் தமிழ் (வருகைப்பருவம்).

(6) குமரநாயகன்! வருகவே
குமரகுருபரன்! வருகவே
இமமுதல்வி புதல்வன்! வருகவே
எழுதவரியவன்! வருகவே
கமலவதனன்! வருகவே
உபயசரணன்! வருகவே
மதுரவசனன்! வருகவே
மருவுகுமரன்! வருகவே.

இன்னும் சிறுபறை சிறுதேர்ப்பருவப் பாடல்களிற் பலகாண லாம். அழகர் பிள்ளைத்தமிழிலும் வருகைப்பருவ முதலிய முன்னிலைப்பாடல்களிற் பல அன்னீற்றண்மை யியல்புவிளிவருதல் காணலாம். சங்கநூல்களிலும், தேவாரம் திருவாசகம் பெரியபுராணம் கந்த புராணமுதலிய சைவநூல்களிலும், பிறதமிழ்நூல்களிலும் மிகவும் பரிசயமுள்ள பண்டிதர்கள் இன்னும் பலபல காட்டுதல்கூடும்.

ஒருவாறு இங்குக்காட்டிய இலக்கியப் பிரயோகங்களாலும் அண்மைச்சொல்லே யியற்கையாகுமென்ற தொல்காப்பியச் சூத்திரம் உயிரீறு மெய்யீறுகளிரண்டற்கும் பொதுவாமென்றே தெளியலாம்.

பத்திராதிபர்.

# தமிழ்ச்சங்ககாலம்.

1. முன்னுரை. கடைச்சங்ககாலம் என்ற என் ஆராய்ச்சிஉரையின் சில பகுதிகளை (செந்தமிழ். தொ. 15) மறுத்து திரு. இ. மு. சுப்பிரமணியபிள்ளை எழுதியிருக்கிறார் (செந்தமிழ். 17. 185-208.). என் பிழைகளை ஒத்துக்கொள்வதில் எனக்குத் தடையொன்றுமில்லை. ஆனாலும், நன்கு ஆராய்ந்தே முடிவுபெற வேண்டியிருப்பதால், அவர் பிழைகளையும் எடுத்துக்காட்டுகிறேன்.

2. முச்சங்கவரலாறு. கடைச்சங்ககாலம் என்ற தலைப்பின்கீழ் நானெழுதியது முன்னூல் வழக்கைப் பின்பற்றியே. ஏனெனில், அடியார்க்குநல்லாருக்கு (கி. பி. 1150-1200) முன், களவியலுரைகாரரை (சூ-1)த்தவிர வேறெவரும், தலையிடைகடையென மூன்று சங்கங்களிருந்தனவாகக் கூறவில்லை. அவர் கூறும் வரலாறும் ஒப்பத்தகுந்ததில்லை. இதற்குரிய சான்றுகள் பின்வருமாறு.

3. முடிநாகராயர். தலைச்சங்கப்புலவராக இந்நூல் கூறும் முரஞ்சியூர் முடிநாகராயர் செய்யுளொன்று (2-வது) புறநானூற்றில் காணப்படுகிறது. இந்நூல் கடைச்சங்கப் புலவர் பாடியதாகக் களவியலுரையே கூறுகிறது இச்செய்யுளும் இயலிலும் நடையிலும் மற்றப் புறப்பாட்டுகளினின்றும் வேறுபடவில்லை. ஆகையால், முடிநாகராயரும் ஒரு கடைச்சங்கப் புலவரே. பாரதப்போர் முடியுமளவும் பாண்டவருக்கும் கௌரவருக்கும் சோறுபயந்த உதியன்சேரலை 'சுற்றமொடு முழுது சேண்விளங்கி, நடுக்கின் றிநிலியரோ' (வரி 19-20) என அவர் பாடியிருக்கிறாரே எனில், கூறுவேன்; நூலியற்றி மிக்ககாலமான பிறகே வகுக்கப்பட்ட உரை தக்கசான்றாகாது. பாண்டியரும் அர்ஜுனன் வழிப்பிறந்ததால் பஞ்சவரெனவும், மாளுவவேந்தரும் 'ஆரியமன்னரை யிருபதின்மர்' (சிலப். 27-177) எனவும், பாண்டியன் நெடுஞ்செழியனும் 'வடவாரியர் படைகடந்த' (சிலப் 23 கட்டுரை 14, 17-8)வனெனவும் கூறப்படுவதால், முடிநாகராயர் இந்நெடுஞ்செழியன் மாளுவவேந்தரை வெற்றிகொண்ட செய்தியையே பாடினாரென்றும், உதியன் சேரல் இப்போரிலேயே இருபடைகட்கும் உணவளித்தானென்றும்,

இங்ஙன்றியை நினைந்தே பின்னர் சேரன் செங்குட்டுவனுக்கு நூற்றுவர் கன்னர் வங்கமுதவினரென்றும் பொருள் கூறுவது தவறாகாது.

4. அகத்தியனார். மேலும், அகத்தியனார் தலையிடைச்சங்கங்களில் இருந்ததாகக் கூறப்படுகிறார். தலைச்சங்கத்தார்க்கு நூல் அகத்தியமெனவும் கூறப்படுவதால், அகத்தியனார் தலைச்சங்கத்தின் தொடக்கத்திலேயே இருந்தவராவர். தலைச்சங்கமிருந்தகாலம் 4440 ஆண்டாதலால், ஆதற்குக் குலையாது அகத்தியனார் உயிர்வாழ்ந்தது. இது ஒப்பமுடிந்ததா? இவ்வகத்தியனாரே 'குடபாலிருபுறச்சையத்' திருந்த 'தமிழ்திரிநிலங்களுள் பல்லவமும் ஒன்றென்றார் (நன்னூல் 272 மயிலைநாதருரை). பல்லவர் தென்னாட்டிற்கு வந்தது கி. பி. 200-க்குப்பின்னென Mr. Dubreuil காட்டியிருப்பதால், அகத்தியனார் காலமும் அதற்குப்பிறகே. ஆகையால், அவர் தலையிடைச்சங்கங்களில் இருந்தவரல்லர்.

5. தோல்காப்பியனார். தொல்காப்பியமும்இடைச்சங்கத்தார்க்கு நூலாகக் கூறப்படுதலின், தொல்காப்பியனார் இடைச்சங்கத் தொடக்கத்திலேயே இருந்தவராவர். இடைச்சங்ககாலம் 3700 ஆண்டாதலால், கடைச்சங்க நூல்களினின்றும் அவ்வளவு காலத்திற்குரிய நடைபொருள்களில் மாறுதல்களொன்றும் தொல்காப்பியத்திற் காணப்படாதது வியப்பே!

6. முச்சங்கவேண்டுகள். களவியலுரை தரும் எண்களும் வியக்கத்தக்கன. தலைச்சங்கத்து 89 பாண்டியர் 4440 ஆண்டுகளும் இடைச்சங்கத்து 59 பாண்டியர் 3700 ஆண்டுகளும், கடைச்சங்கத்து 49 பாண்டியர் 1850 ஆண்டுகளும் வீற்றிருந்தனரெனக் கூறப்படுவதால், தலைமுறை ஒன்றிற்கு முறையே 50, 63, 38 ஆண்டுகளாயின இவை மிகையே. மேலும், பாண்டியரின் தொகை 89, 59, 49 என்றும், புலவர்தொகை 59, 549; 49, 449, 4449 என்றும், கவியரங்கேறிய பாண்டியர் தொகை 7, 5, 3 என்றும், இடைச்சங்ககாலம், புலவர்தொகையிரண்டும் 3700 என்றும், கடைச்சங்ககாலம் $3700 \times \frac{1}{2} = 1850$ என்றும், தலைச்சங்ககாலம் இடைகடைச்சங்ககாலம், முச்சங்ககாலம், இவை 4440, 5550, 9990 என்றும் இருப்பதால், முச்சங்கவரலாறு ஒப்பத்தகுந்ததில்லை.

7. பொய்யடிமையில்லாதபுலவர். இதன்றியும், சிவபக்தியிற் சிறந்த தலையிடைச்சங்கப் புலவரைக் கூறாது, நக்கீரர் கபிலர் பரணர் முதல் நாற்பத்தொன்பதின்மரையே பொய்யடிமையில்லாத புலவரென்றும், கடைச்சங்கப்புலவரென்றாது தமிழ்ச்சங்கப்புலவரென்றும் நம்பியாண்டார் நம்பி (கி. பி. 1025) கூறுவதால் (திருத்தொண்டர் திருவந்தாதி-11-ம் திருமுறை-49) அவர் தலையிடை கடையென்ற பிரிவினை அறிந்ததில்லை. ஆகையால் சங்கமொன்றேயிருந்தது. மேலும் களவியலுரை கூறும் முச்சங்கவரலாறு நம்பியின்காலத்திற்குப் பிந்தியதே.

8. கடலாட்டு. இனி நண்பர்கூறுவதை ஆராய்வாம். முதலில், கொடியிறங்கிய மறுநாளே கடலாட்டு நிகழ்ந்ததென்றார். (ப. 185) இதற்குச் சான்று தாராததேன்?

9. துர்நிமித்தங்கள். 'அப்பொழுது பயணத்திற்காகாத பல துர்நிமித்தங்கள் நிகழ்ந்தனவென்றறியலாம்' என்றார். (ப. 186) நூலில் கூறப்படாத இச்செய்தியை அவர் எவ்வாறு உணர்ந்தனர்?

10. மதுரை யெரியுண்டகாலம். 'கண்ணகி அவ்வூரை எரியூட்டினபொழுது சூரியனஸ்தமித்து 4, 5 நாழிகையே சென்றதாகும். அவ்வாறு தீப்பற்றியது இரவிலேதான். ஏனெனில், தூங்கியிருந்த பிள்ளைகளையும் கணவலரையுமெழுப்பி மாதரோடினர்' (ப. 187) என்றார். 5 நாழிகை என்றது 2 மணிநேரமாகையால் இரவு 8 மணிக்கு மதுரை யெரியுண்டதாகும். 8 மணிக்குள் பிள்ளைகளையன்றி, கணவரும் துயில்கொண்டாரென்றால், அவரது ஊக்கம் வியக்கற்பாலதே! நள்ளிருளில் மதுரை தீப்பட்டதென்றே நூல் கூறுகிறது. (சிலப். பதிகம் 41; 27-78). அன்று திதி அஷ்டமியாதலால் (23-134) நள்ளிருளென்றது 12 மணிக்குச் சிறிது முன்னராம். 8 மணிக்கே தீப்பட்டிருக்கவேண்டியதில்லை.

11. அழல்சேர்குட்டம். 'அழல்சேர் குட்டம்' என்பது கார்த்திகையே என்றதற்கு நண்பர்தரும் சான்றுகள் 'கார்த்திகை பரணி' என்ற அரும்பதவுரையும், 'அழற்குட்டம்' (புறம்-229) என்பதற்கு கார்த்திகை நாள்' என்ற உரையுமே (ப. 188). 'கார்த்திகைப் பரணி' என்பதற்கு ,கார்த்திகையே' என்று ஒரு புத்துரையும் கூறினர்.

'கார்த்திகைபரணி' என்பதற்கு பரணிக்குமேல் வந்த கார்த்திகை என்றபொருள் எவ்வாறு பெறப்பட்டது? இதில் 'பரணி' ஒருபயனிலா மிகுபதமா? அழற்குட்டம் வேறு அழல்சேர்குட்டம் வேறு என்பதையு மறந்தனர். இவ்வாறு திருத்திப் பொருள்கூறுவது பயனற்றதொழிலே. ஆயின், இதன் பொருள்தானென்னவெனில், கூறுவேன். அழல் என்பது கார்த்திகை. அழற்குட்டம் என்றதன் உரை கார்த்திகை நாள். ஆகையால், குட்டமென்பது நாள். அழல்சேர் குட்டம் என்றால் கார்த்திகையைச் சேர்கின்ற, அதாவது கார்த்திகைக்கு முன்வரும் நாள் பரணியே. இதைக்குறிப்பதற்கே 'கார்த்திகைபரணி' என்று உரைகூறிற்று. குட்டமென்பதற்குக் குளமென்றும் (புறம்-243), குளத்திற்கு நாளென்றும் (சதபதபிராம்மணம் 11, 5, 5, 7), குட்டம் தாரம் இரண்டிற்கும் ஆழமென்றும் (புறம். 20; சிறுபாண 180) பொருளிருத்தலும் இம்முடிபையே வலியுறுத்துகின்றது.

12. கோயிலெடுத்தகாலம். இனி, மதுரையெரியுண்டு 4 ஆண்டுகளும் 7 மாதங்களும் சென்றபிறகே கண்ணகிக்குக் கோயிலெடுக்கப்பட்டதென நண்பர் கூறுகிறார். அவர் கணக்கிட்டது, வஞ்சிநீங்குவதற்கு $1\frac{1}{2}$ மாதங்களென்றும், நீலகிரியில் தங்கியது 1 ஆண்டென்றும் கங்கைத் தென்கரை சேர்வதற்கும், திரும்ப நீலகிரிசேர்வதற்கும் 17+17=34 மாதங்களென்றும், சண்டை யெதிர்பார்த்திருந்தது 1 மாதமென்றும், கல் கொணர 2 மாதங்களென்றும், வஞ்சிசேர்வதற்கு $3\frac{1}{2}$ மாதங்களென்றும், கோயிலெடுக்க 1 மாதமென்றுமே (ப. 190). மதுரை தீப்பட்டு 14-ம் நாளில் கண்ணகி செங்குன்றூரடைந்தாளென்றும், அதற்கு 26-ம் நாளில் செங்குட்டுவன் வஞ்சி நீங்கினனென்றும் நண்பர் காட்டியிருக்கிறார். ஆகையால், மதுரையெரிந்த 39-ம் நாளிலேயே வஞ்சி நீங்கியது. இது $1\frac{1}{2}$ மாதங்களுக்கும் குறைவே. நீலகிரியில் தங்கியது 1 ஆண்டென்றும் காட்டினர். கனகவிசயரைச் செங்குட்டுவன் வெற்றிகொண்ட இடம் கங்கைக்கரையென்றே கூறப்படுவதால், குறைந்த அளவையே கொண்டாலும் அது பிரயாகைக்கடுத்திருக்கும். அவன் நேபாளத்தையும் வென்றதாகக் கூறப்படாததால், இமயமென்றது ஹரித்வாரத்தினுமணித்தாயிராது. மதுரையிலிருந்து செங்குன்றூருக்கும், வஞ்சியிலிருந்து நீலகிரிக்கும் 50 காதமும், நீலகிரியிலிருந்து பிரயாகைக்கு 500 காதமும், பிரயாகையிலிருந்து

ஹரித்வாரத்திற்கு 175 காதமுமென்று படம்நோக்கி அறியலாம். மதுரைநீங்கிக் கண்ணகி 14-ம் நாளில் செங்குன்றூர் சேர்ந்தாள். ஆகையால், பிரயாகைக்கு நீலகிரியிலிருந்து போவதற்கு 5 மாதங்களுக்கு மேல் வேண்டப்படாது. தூதர்கள் கங்கைக்கரை போய் வருவதற்கு 1 ஆண்டே ஆயிற்றெனை நண்பரே கூறுகிறார். இவ்வாறிருக்கவும், கங்கைக்கரை சேர்வதற்கு 17 மாதங்களாகுமென்று அவரே எவ்வாறு கூறினர்? இனி, செங்குட்டுவன் சண்டையை எதிர்பார்த்திருந்த செய்தி ஒன்றும் நூலில் கூறப்படவில்லை. ஆயினும், கங்கையின் வடமருங்கெய்தி அந்நாடுகழிந்து சென்றதற்கும் (சிலப். 26. 177-8), கனகவிசயர் போரில்தோற்று, ஓடி ஒளித்துப் பலவிடத்தும் திரிந்ததற்பின்னர் அகப்பட்டதற்கும் (சிலப். 26. 222-230) இவ்வொருமாதம் வேண்டிவரும். பின்னர், கங்கைக்கரைக்கு 500 காதம் செல்வதற்கு 17 மாதங்களாகுமெனக்கூறிய நண்பரே இமையம் போய்வர 350 காதம் செல்வதற்கு 2-ஏ மாதங்களாகுமென்று எவ்வாறுரைத்தனர்? மேலும் நீலகிரியிலிருந்து வஞ்சிவரையுள்ள வழி கங்கைக்கரையிலிருந்து நீலகிரிவரையுள்ள வழியில் 5-ல் ஒன்றென்றும், ஆகையால் அதற்கு 3½ மாதங்களாகுமென்றும் கூறுகிறார். 500 காதங்களில் 50 காதங்கள் 5-ல் ஒருபாகம் எவ்வாறாகுமென்று விளக்கவில்லை. அன்றியும், மதுரையிலிருந்து செங்குன்றூருக்குக் கண்ணகி 14-ம் நாளில் போயினளெனக் கூறுமவரே அதே காதவளவுள்ள நீலகிரியிலிருந்து வஞ்சிக்குள்ள வழி செல்வதற்கு 3½ மாதங்களாமென்று எவ்வாறு கூறினர்? இவ்வாறெல்லாமிடர்ப்படாது கணக்கிடவேண்டும். வஞ்சி நீங்கி 32 மாதங்கள் சென்றதும், செங்குட்டுவன் கங்கைத் தென்கரையடைந்தான். இதில் நீலகிரிசென்று தங்கியிருந்த 1 ஆண்டை நீக்கினால், 20 மாதங்கள் பெறப்பட்டன. இதில் நீலகிரியிலிருந்து கங்கைக்கரைவரை 500 காதம்சென்றதும், பிரயாகையிலிருந்து ஹரித்வாரம்வரை 175 காதம் சேனைத்தலைவன் சென்று திரும்பியதும் நிகழ்ந்தன. ஆகையால், $500+175\times2=850$ காதம் செல்வதற்கு 20 மாதங்களாயின. ஆகையால் பிரயாகையிலிருந்து வஞ்சிவரை $500\times50=550$ காதம் செல்வதற்கு 13 மாதங்களுக்குமேல் சென்றிராது. அதன்பிறகு கோயிலெடுத்தற்குச் சிலநாட்களே சென்றிருக்குமென்று நண்பரேகூறுவதால் (ப. 194), அவ்விழவு மதுரை யெரியுண்டு 1½+32+

13½=47 மாதங்கள் அதாவது 4 ஆண்டுகளுக்ககமே நிகழ்ந்ததெனக் கூறவேண்டும்.

13. செங்குட்டுவன்வயது. இவ்விழவு நிகழ்ந்தபொழுது செங்குட்டுவன் 50 ஆண்டுகள் அரசுபுரிந்திருந்ததாக நண்பர் கூறுகிறார் (ப. 192). இதற்குச்சான்றாக, வையங்காவல்பூண்ட நின்னல்யாண்டையைந்திரட்டி சென்றதற்பின்னு, மறக்களவேள்விசெய்யாதியாங்கணு, மறக்களவேள்விசெய்வோயாயினை' (சிலப். 28. 129-132) என்ற வரிகளில் வரும் 50 ஆண்டுகள், பட்டத்திற்கு வருமுன் அறக்கள வேள்வி செய்யமுடியாததால், அவனாண்டகாலத்தையே குறித்ததென்றார். இவ்வாறு கூறுவதற்கு 'நின்னல்யாண்டையைந்திரட்டி சென்றதற்பின்னும்' என்பதற்கு 'நீ ஆண்ட 50 ஆண்டுகளிலும்' எனப்பொருள்கொள்ளவேண்டும். ஆனால் இதன் செம்பொருள் 'உன்வயது 50 ஆண்டாயிருப்பினும்' என்பதே. '50 சென்றதற்பின்னும்' என்பது '50-ல்' என்றாகமாட்டாது. 'காவல்பூண்ட நின்யாண்டு' என்றால் 'அரசனாகிய உன்வயது' என்றே பொருள்படும். 'நீ அரசனாயபின் யாண்டு' என்று பொருள்படவேண்டுமானால் 'காவல்பூண்டு நின்யாண்டு' என்றிருக்கவேண்டும். மேலும், செங்குட்டுவன் நரைமுதிர் யாக்கையைக் கண்டதாகக் கூறப்படுவதால், இவ்வாண்டுகள் அவன் அரசுகாலத்தையே குறித்தல்வேண்டுமென நண்பர் கூறுகிறார். இதுவும் பொருந்தாது. ஏனெனில், 50 வயதில் இயல்பாயும், சிலருக்கு அதற்கு முன்னரே, நரைமுதிர்வதை நேரில்காண்கிறோம். ஆகையால், கோயிலெடுத்தபோது செங்குட்டுவன் 50 வயதினனாயே இருந்தான்.

14. மாதவிதுறவின்காலம். மாடலன் குமரியாடி மதுரைவருதற்கு மதுரையெரியுண்டு 2 மாதங்களாயின என்றார் (ப. 194). இது தவறு. 'மாதவமுனிவன் மலைவலங்கொண்டு' குமரியம்பெருந்துறை கொள்கைபிற்படிந்து, தமர்முதற்பெயர்ந்த மாடலனை 'கோவலன் சென்று சேவடி வணங்'கியதாகக் கூறப்படுவதால், மதுரை தீப்படு முன்னரே மாடலன் குமரியாடித் திரும்பியவனாவன்.(சிலப். 15. 14-9). பின்னுமிரண்டுமாதங்களில் மாடலன் புகாரடைந்திருப்பான் என்கிறார். ஆனால் மதுரையிலிருந்து செங்குன்றூரளவே புகாருமிருத்தலால், 1 மாதத்திற்குமேற் சென்றிராது. மற்றுமிரண்டொரு மாதங்களில் கண்ணகிதற்றாயும் கோவலனற்றாயும் உயிர்துறந்தனரென்கிறார்.

இதுவும் தவறே. ஏனெனில், 'மைந்தற்குற்றது மடந்தைக்குற்றதுஞ், செங்கோல்வேந்தற்குற்றதுங் கேட்டுக், கோவலன்றாதை...துற வெய்தவுந், துறந்தோன் மனைவி மகன்றுயர்பொறாஅ, ளிறந்ததுயரெய்தி யிரங்கி மெய்விடவுஞ், கண்ணகிதாதை—அறங்கொள்ளவுந், தானம் புரிந்தோன்றன்மனைவி—நல்லுயிர்நீத்து மெய்விடவு, மற்றதுகேட்டு மாதவி—போதித்தானம்புரிந்தறங்கொள்ளவு' (சிலப். 27. 88-108) மென்று கூறப்படுவதால், கோவலன் கண்ணகி இறந்தசெய்தி கேட்ட தும், அவர் தாய்மார் உயிர் துறந்ததாகவும், மாதவிதுறவெய்தியதாக வுமே கருதவேண்டும். ஆகவே, இச்செய்திகள் நிகழ்ந்தது மதுரை யெரியுண்டு 1 மாதத்திற்ககமேயென்க.

15. நண்பர்குறித்த மதுரை யெரியுண்டகாலம். கி. பி. 1-முதல் 200வரை, கி. பி. 144-ஐத்தவிர வேறுண்டொன்றும் மதுரையெரி யுண்டகாலத்துக் கணிதக்குறிப்புக்களுக்குப் பொருந்தவில்லை என்றார். (ப-199-200) ஆகையால், இவ்வாண்டும் பொருந்தவில்லையானால், கி. பி. 200க்குப் பின்னரே மதுரை யெரியுண்டதெனல் வேண்டும். இவ் வாண்டே மதுரை யெரியுண்டதாயின், இதில் ஆடி 25-ல் வெள்ளி யன்று, நள்ளிரவில், பரணியும், பஹுளாஷ்டமியும் சேர்ந்திருத்தல் வேண்டும். ஆனால், அன்றிரவு 36 நா. 17 வி. வரையே பரணி இருந்த தென நண்பரே கூறுவதால் (ப. 207), நாள்பொருந்தவில்லை. அஷ்டமி யாவது இருந்ததாவென்றால், திரு. L. D. சுவாமிக்கண்ணுப்பிள்ளை இயற்றியுதவிய Indian Chronology என்ற அரிய நூலின் கணித முறையை (ப. 92-3)ப் பின்பற்றிக் கணித்ததில் அன்று அஷ்டமி 18நா. 25 வி. வரையுமே இருந்ததால், திதியும் பொருந்தவில்லை. ஆகையால் நண்பர்தந்த காலவரையறைகளெல்லாம் தவறே எனக் கூறவேண்டிய தில்லை.

16. புத்தநிர்வாணகாலம். பின்னர் புத்தர் நிர்வாணமடைந்து 218-ஆவது ஆண்டில் அசோகன்பட்டமெய்தினன் என்றார். ஆனால் 4 ஆண்டுகள் தனி அரசு புரிந்தபின்னும், புத்தர் நிர்வாணமடைந்து 218 ஆண்டுகள் சென்றதற் பின்னும் (பரிநிர்வ்ருதே) அசோகன் அபி ஷேகம் செய்துகொண்டானென்று தீபவம்சமும் (6.1, 21-2), மஹா வம்சமும் (5.21-2) கூறுவதால், புத்தர் நிர்வாணமடைந்து 218—4= 214 ஆண்டுகள் சென்ற பின்னரே அசோகன்பட்டமெய்தியவனுவன்.

அவனுக்குமுன் பிந்துசாரன்—பிம்பசாரனென்றது பிழை—25 ஆண்டுகளும் சந்திரகுப்தன் 24 ஆண்டுகளும் ஆண்டதால், சந்திரகுப்தன் பட்டமெய்தியது புத்தரிறந்து 165 ஆண்டுகளுக்குப்பின். தீபவம்சம், மஹாவம்சம், (5-18) கூறுவதுபோல பிந்துசாரன் 28 ஆண்டுகள் ஆண்டானெனக்கொண்டால், 162 என்றாகும். இனி, அலெக்ஸாண்டர் இறந்தபின் இந்தியர் அவன்படைத்தலைவரைக் கொன்றாரென்றும், அவர் சுவதந்திரம்பெறுவதற்குதவியவன் சந்திரகுப்தனென்றும், ஆனால் பட்டமெய்தியபின் அவனே அவர்களை வருத்தினனென்றும் ஜஸ்டினஸ் என்ற யவனாசிரியர் கூறுவதால் (15-4), கி. மு. 323-ல் அலெக்ஸாண்டர் இறந்தபிறகே சந்திரகுப்தன் பட்டமெய்தினன். யவனப்படைத்தலைவரைக் கொன்றது இந்தியரே, சந்திரகுப்தனல்ல. கொல்லப்பட்ட படைத்தலைவர் இருவரென்பதற்கும் சான்றிலது. அலெக்ஸாண்டர் தான் இறக்குமுன் கொல்லப்பட்டதாகக் கேட்ட பிலிப்பாஸும், அவன் இறந்தபின் கொல்லப்பட்ட படைத்தலைவனும் ஒருவனேயெனப் பிழைபடக்கருதியதால்தான் சந்திரகுப்தன் அலெக்ஸாண்டர் இறக்குமுன் பட்டமெய்தியவனென நண்பர் கூறியது. ஆகையால் கி. மு. 323+165=488க்கு முன் புத்தரிறக்கவில்லையென்றும், கி. மு. 493-ல் புத்தரிறந்ததாக நண்பர்கூறுவது பிழையென்றும் தெளிவாம். ஆனால் கி. மு. 493-வே கணிதக்குறிப்புக்களுக்குப் பொருந்துவதென்கிறார். இக்குறிப்புக்களொன்றும் அச்வகோஷரது புத்த சரித்திரத்தை உள்ளிட்ட லலிதவிஸ்தர (கி பி. 150)த்திற்கு முந்திய நூல்களொன்றிலும் காணப்படாததேன்? இதன்றியும், வைசாகபௌர்ணிமியிலேயே புத்தர் சரித்திரத்தில் பலநிகழ்ச்சிகளும் கூறப்பட்டன. அவர் கர்ப்பத்திற் றோன்றியதும் (லலிதவிஸ்தரம் Ed. Lefmann p. 54 f) பிறந்ததும் (தீபவம்சம் (21-28) அத்திதியிலேயே. இவ்விரண்டு முண்மையாயின் அவர் கர்ப்பத்தில் 280 நாள் மாத்திரமல்ல, 1 ஆண்டிருந்திருக்கவேண்டும். இதுவும் அவர்பெருமைக்கு ஒரு அறிகுறி போலும்! மேலும், அவர்மகன் ராஹுலன் பிறந்ததும் (Kern: Manual of Indian Buddhism p 6, n. 2), அவர் துறந்ததும் (வே. சுவாமிநாதையர்: புத்தசரித்திரம். 10), மாரனை வென்றதும் (Kern p. 16 n. 2), சம்போதியடைந்ததும் (மஹாவம்சம் 1-12), இறந்ததும் (தீபவம்சம் 15-70; 5-1; மஹாவம்சம் 3-2) இவையெல்

லாம் அத்திதியிலேயே நிகழ்ந்தனவாகக் கூறப்படுகின்றன. இவ்வாறே புத்தர் பிறப்பையும், சம்போதியையும் குறித்து மணிமேகலை கூறுகிறது. (10-83; 15. 23-6). இதுபோலவே மஹாவீரர் சரித்திரத்திலும், அவர் தேவாநந்தையின் கர்ப்பத்துள் சென்றதும், திரிசலையின் உதரத்திற்கு மாற்றப்பட்டதும், பிறந்ததும், துறந்ததும், கைவல்யமடைந்ததும் இவையெல்லாம் உத்தரபல்குநீ நாட்களில் நிகழ்ந்தனவாகக் கூறப்படுகின்றது (S. P. E. 22. 217-8, 264-5). இவ்வாறு பெரியாரின் வாழ்க்கைகளில் பல நிகழ்ச்சிகளும் ஒரே திதி அல்லது நாளுடன் பொருந்தியதாக இயற்கைக்கு மாறுபட்டுக் கூறுவது நம்மவர் வழக்கமாகையால், இக்கணிதக் குறிப்புகளினின்றும் அவர்காலங்களை அறுதியிடப்புகுதல் தவறே. மேலும், இக்குறிப்புகள் நம்பத்தகாதவை என்பதற்கு அவை கிழமைகளைக் குறித்ததேயாகும். கநிஷ்கனது 18-வது ஆண்டில்=கி. பி. 129-ல் பொறிக்கப்பட்ட மாணிக்யால கல்வெட்டில், ஹோரை அதற்குச் சமரே பொருத்தமான முஹூர்த்தத்தால் (=$\frac{4}{5}$ஹோரை) 'அதாவது முஹூர்த்தம்' என இருமுறை விளக்கப்பட்டிருப்பதால் (J. R. A. S. 1914. 646), புதிதாயேற்படுத்தப்பட்ட ஹோரையைக்' குடிகளுக்கு அறிவுறுத்தவே அவ்வாறு செய்யப்பட்டதென்றும், ஆகையால் கி. பி. 129-க்கு முன் இந்தியாவில் ஹோரை அறியப்படவில்லையென்றும் தெளிவாம். ஹோரை அறியப்படாதாயின், வாரநாட் பெயர்களும் அறியப்படவில்லை. ஏனெனில், ஒரு நாளை 24 ஹோரைகளாகப்பிரித்து, ஒவ்வொன்றிற்கும் பூமியிலிருந்துள்ள தூர அளவின்படி முறையாக ஒவ்வொருகிரஹத்தையும் அவைகளின் தேவதைகளாகக்கொண்டு, ஒவ்வொரு நாளையும் முறையே அதன் முதல்ஹோரையின் தேவதை பெயரால் வழங்கி, ஞாயிற்றுக்கிழமையை முதலாவதாக வைத்துமே வாரநாட் பெயர்களும் வரிசைகளும் பெறப்பட்டன. ஆகையால், புத்தர்சரித்திரத்தில் காணப்படும் வாரநாட்பெயர்கள் கி. பி. 129க்குப் பின்னரே

கணிக்கப்பட்டிருத்தல்வேண்டும். இனி, புத்தரிறந்தது இரவு நடுயாமத்தென நண்பர் கூறுகிறார். இது தவறென்பது, புத்தரிறப்பைக் கூறும் நூல்களிலெல்லாம் முந்தியதான மஹா பரிநிர்வாணசூத்திரம் அவர் கடையாமத்திலேயே இறந்தாரெனக் கூறுவதால் (S. B. G. 11-112f), நன்குவிளங்கும்.

17. இலங்கைக்கயவாகுவின் காலம். இனி, கயவாகுவின்காலம் கி. பி. 148-170 யென்றும், அவன் பட்டமெய்தியதும் தென் இந்தியாவிற்குவந்தானென்றும், ஆகையால் யான் கூறும் கி. பி. 157 பொருந்தாது; அவர் கூறும் 144 ஏ பொருந்துவதென்றும் கூறுகிறார். (ப. 202). மஹாவம்சத்திற்கு முந்தியதென அவரே சிறப்பித்துக் கூறும் தீபவம்சம் புத்தரிறந்து 641 ஆண்டுகளும் 9 மாதங்களும் 11 நாட்களும் சென்றபின் கயவாகு பட்டமெய்தினனெனக்கூறுவதால், நண்பர் புத்தரிறந்தகாலமெனக்கூறும் கி. மு. 493 வைகாசி 19-யே கொண்டாலும், கயவாகுபட்டமெய்தியது கி. பி. 150 மாசி 30-ல், கி. பி. 148-ல் அன்று (Mahavamsa fr. Geiger & Bode. Introd. xxxvi-xxxviii). ஆகையால், கயவாகு தென் இந்தியாவிற்கு கி. பி. 150க்கு முன் போயிருக்கமுடியாது. நண்பர் கருதியவழி மதுரை யெரியுண்டு 4 ஆண்டுகளும் 7 மாதங்களும் சென்றபின் கோயிலெடுக்கப்பட்டதென்றாலும், மதுரை யெரியுண்டது கி. பி. 145க்கு முன்னில்லை. கி. பி. 144 என்று நண்பர் எவ்வாறு கூறினர்? இனி, புத்தரிறந்தது கி. மு. 483-ல் என்று Dr. Fleet காட்டியிருக்கிறார் (J. R. A. S. 1909. 1-34) நண்பரும் புத்தரிறந்த கணிதக்குறிப்புகளுக்கு அவ்வாண்டு பொருந்துமென்றார் (ப. 201). ஆகையால் கி. மு. 483 வைகாசி 27-லிருந்து கணக்கிட்டால், கயவாகு பட்டமெய்தியது கி. பி 160 பங்குனி 8-ல். பின்னர், படைதிரட்டி, கடல்கடந்து, சோணாடு வென்று, கோயிலெடுக்கும்போது வந்தது கி. பி. 161-லாகும். 'மதுரை யெரியுண்டு 4 ஆண்டுகள் சென்றபின் கோயிலெடுக்கப்பட்டதால்,

கி. பி. 157-ல் மதுரை யெரியுண்டதென்பதில் தவறென்ன? இனி, கரிகாலன் படையெடுத்துச் சென்று இலங்கையிலிருந்து 12000 சிங்களர்களைப் பிடித்துவந்ததாகக் கூறுகிறார் (ப. 202). இச்செய்தி தீபவம்சம் மஹாவம்சம் இவைகளிலாவது, சங்கநூல்களிலாவது, கரிகாலனையே பாடும் பட்டினப்பாலை, பொருநராற்றுப்படை இவைகளிலாவது யாண்டும் கூறப்படாததேன்? இச்செய்தியைக்கூறும் 200, 300 ஆண்டுகளுக்கு முன்னரே தோன்றிய ராஜாவளி, பூஜாவளியும்கூடக் கரிகாலன்பெயரைக் குறியாததேன்? மேலும், பதிலுக்குப் பதில் கயவாகு சோணாட்டின்மேல் படையெடுத்துவந்திருந்தால், இச்செய்தியையும் தீபவம்சம், மஹாவம்சம் கூறாது விடுத்ததேன்? இதன்றியும் பதிலுக்குப்பதிலே கயவாகு படையெடுத்திருப்பினும், தக்க காலத்தை எதிர்பாராதும், முன்பின் ஆராயாதும், பட்டத்திற்கு வந்ததும் போர் தேடவேண்டுமென எந்த அர்த்தசாஸ்திரம் கூறுகிறது? இன்னும், பட்டத்திற்குவந்து பலவாண்டுகள் சென்றபின்னரே, ஒரு கிழவி வருந்துவதன்காரணத்தை ஆராய்ந்தபிறகே முன் சோழர் படையெடுப்பைக் கயவாகு அறிந்தானென நண்பர் சான்றாக்கொண்ட ராஜாவளியே கூறுகிறது.

18. மணிமேகலை சங்கநூலே. இனி, மணிமேகலை சங்கநூலல்லவெனக் காட்டமுயன்றார் (ப. 202-4). கோவலன்கண்ணகி இறந்ததைக்கேட்டதும் மாதவி துறந்தாளென்றும், மணிமேகலை பிராப்தியாகும்வரை மாதவி நற்றாயுடனிருந்தாளென்றும், பிராப்தியானதும், மாதவி அவளைப் போதித்தானம் புரிந்தறம்படுத்தனளென்றும், இது நிகழ்ந்தது கண்ணகிக்குக் கோயிலெடுக்குமுன்னரே யென்றும் நண்பர் கூறுவது எனக்கும் உடன்பாடே. இதன்பிறகு மணிமேகலை கணிகையருடன் பழகும்படி மாதவி நற்றாயுடனிராது, துறந்த தன் தாயுடனிருந்தாளென்பதே பொருந்தும். மணிமேகலையில் கூறப்படும் இந்திரவிழவுகாலத்து, மணிமேகலை தன் தாயுடனிருந்ததால், அவ்விழவு

அவள் துறந்ததற்பின்னரேயாகும். இதற்குமாறாக, மாதவியும் மணிமேகலையும் அவ்விழவின் முந்நாளாடலுக்கு வாராததால் அவ்வூராரேச்சுரையெழுந்ததென்றும், மாதவி துறவெய்தியவுடனே அவ்வுரையெழுந்திருக்குமாதலால், இவ்விழவு கோவலனிறந்த மறுசித்திரையே நிகழ்ந்ததென மணிமேகலை கூறுகிறதென்றும் நண்பர் கூறுகிறார். ஆனால் நூலில்கூறப்படுவன 'மணிமேகலையொடு மாதவி' வாராததால் சித்திராபதி துன்புற்றனளென்றும் (2-4-5), ஊராரேச்சுரை இவராடலுக்கு வாராததைக்குறித்தல்லவென்றும், 'கற்றுத்துறைபோகிய பொற்றொடி' மாதவி 'நற்றவம்புரிந்தது நாணுடைத்தென்' றுமே (2. 32-3). 'மணிமேகலையொடு மாதவி வாராத்துன்பம்' என்றதில் மணிமேகலை வாராததே உயர்ந்ததென்பது 'ஒருவினையொடுச்சொலுயர்பின்வழித்தே' என்றதால் (தொல். சொல். 91) தெளிவாம். ஆகையால் மாதவிக்கும் ஆடலுக்கும் இயைபொன்றுமிலது. மணிமேகலை இளையளாதலால் தனியே வாராள். அவளைக் கூட்டிவருவதற்கே மாதவி கூறப்பட்டாள். மாதவி துறவெய்திய பொழுதே ஏச்சுரை யெழுந்திருக்குமாயினும், கோவலன் தன் பிரிவாற்றாது துறந்து தனியேவதிந்திருக்கும் மாதவியை மாதவி நற்றாய் மீண்டும் மறுத்தாள். ஆனால் மணிமேகலையும் துறவுவழிப்படுதலும் அவள் விழவிற்கு வாராததால் துன்புற்ற சித்திராபதி ஊராருரையைக் கூறியாயினும் தன்வழிப்படுத்த முயன்றாளென்பதில் தவறென்ன? ஆகையால் இவ்விழவு கோவலனிறந்த மறுசித்திரையே நிகழ்ந்திருக்க வேண்டியதில்லை. மேலும், மணிமேகலை ஆடலுக்கு வாராததைப்பற்றி நூலொன்றும் கூறவில்லை. அவள் விழவைக் காண்பதற்கு வாராததாலே மாதவிநற்றாய் மனம் புண்பட்டது. (2.3.) ஆகையால் குழல்களைந்த கோலத்துடனுடுவதைப் பற்றி நண்பர் கூறுவனயாவும் வேண்டப்படாதனவாயிற்று. சித்திராபதி மாதவியையும் மணிமேகலையையும் ஆடலுக்கு வரவேண்டினதாகக் கூறுவதற்கு நண்பர் சான்றுதாராததேன்? நூலில் காணப்படுவ

தெல்லாம் 'பயங்கெழுமாநகரலரெடுத்துரை' யென்றும் (2.9), 'பலர் தொகுபுரைக்கும் பண்பில்வாய்மொழி, நயம்பாடில்லை நாணுடைத்' தென்றுமே (2. 35-6). மணிமேகலை துறந்ததாகத் தெரியவில்லை யென்று நண்பர் கூறுவதும் தவறே. ஏனெனில், 'மாபெரும் பத்தினிமகண்மணிமேகலை, யருந்தவப்படுத்தலல்லது யாவதுந், திருந் தாச்செய்கைத்தீத்தொழிற்படாஅள்' (2. 55-7) என்று மாதவிகூறுவ தால் மணிமேகலை பிராப்தியடைந்தும் பரத்தமைத் தொழில்மேற் கொள்ளாளென்றும், பத்தினிக்கடவுளின் மகளவளாதலால் அரியதவ வழிப்புகுதற்குரிய துறவெய்தினளென்றும், 'தவத்திறம் பூண்டுதருமங் கேட்டுப், பவத்திறமறுகெனப்பாவை நோற்றனள்' (30. 263-4) எனக் கூறப்படுவதால், கச்சிநகர்புக்க பின்னரே மணிமேகலை தவநெறிக்குரிய அறத்தைக் கேட்டனளென்றும், சிலப்பதிகாரத்தில் மணிமேகலை துற வைக் கூறுமிடத்து 'ஓங்கியநன்மணியுறுகடல்வீழ்த்தோர்', 'தம்மிற் றுன்பந்தாநனியெய்த' (30.30-1) என்று கூறப்படுவது போலவே, மணிமேகலையினும் 'அரும்பெறன்மணி, ஓங்குதிரைப்பெருங்கடல் வீழ்த்தோர்போன்று, மையனெஞ்சமொடுவயந்தமாலையும்' (2.72-4) என்று கூறப்படுவதால், ஈண்டும் மணிமேகலை துறவே கூறப்பட்ட தென்றும், சிலப்பதிகாரத்தில் மணிமேகலை துறவேயன்றித் தவத்திறம் பூண்டது கூறப்படவில்லையென 'தன்றுறவெமக்குச்சாற்றினள்.' (30.33) என்றவரி காட்டுமென்றும் இனிது விளங்கும். துறவெய்தி யிருப்பினும், அறிவு முதிர்ந்த பின்னரே அறவுரைகேட்டல் கூடு மென்று கூறவேண்டியதில்லை. மாதவி குழல்களைந்திருந்தது கூறப் படவில்லை என நண்பர் கூறுகிறார். ஆனால் மாதவிதானே மாதவருறை விடம் புகுந்து அறவுரை கேட்டதாகக் கூறுவதால் (2.59-69), அவள் குழல்களைந்தது கூறவேண்டாததாயிற்று. குழல்களைந்த பின்னரே சங்கத்தைச் சரணடைந்து அறவுரை கேட்பது சாக்கியர் வழக்கமென யாவருமறிவர். கோயிலெடுக்குமுன் பிராப்தியாகித் துறவெய்திய மணி

மேகலை கோயிலெடுத்தபின்னரே தவநெறிபற்றினளென்று, அவள் கச்சிபோகுமுன் வஞ்சியில் 'கண்ணகிக் கடவுளை வணங்கியதாகக் கூறப் படுவதால் தெரிகின்றது. இனி, கோயிலெடுக்குமுன் உதயகுமாரன் கொலையுண்டதும் புகாரைக் கடல்கொண்டதும் சிலப்பதிகாரத்தில் கூறப்படவில்லை என்கிறார். புகார்கடல்வயிறுபுக்கது இந்திர விழவு நிகழ்த்தத்தவறியதால் (மணி-25, 197-203). ஆகையால், அது மணி மேகலை வாராதொழிந்த விழவு நிகழ்ந்து ஓராண்டாயினும் சென்றதற் பின்னரே இக்கடல்கோள் கோயிலெடுத்த பிறகே நிகழ்ந்தது. ஏனெ னில், கரிகாலன்பெற்ற (சிலப். 5. 99-104) 'வச்சிரமவந்திமகதமொடு குழீஇய, சித்திரமண்டபம்' நீலன் முதலிய கஞ்சுகமாக்கள் கோயி லெடுப்பதற்குச் சிறிது முன்னரே கனகவிசயருடன் செம்பியன் மூதூர் சென்றபோது அங்கிருந்ததாகக் கூறப்படுவதாலும் (சிலப். 28. 85-7), கரிகாலன் புகார்ச் சோழனாதலாலும் (பட்டினப்பாலை), கோயிலெடுக்கு முன் புகார் கடல்கொள்ளப்படவில்லை. ஆகையாற்றான் உதயகுமா ரன் கொலையுண்டதையும், புகாரைக்கடல்கொண்டதையும் சிலப்பதி காரம் கூறாது விடுத்தது. உதயகுமாரன் கொலையுண்ட செய்தி சிலப் பதிகாரத்தில் கூறப்படவேண்டியதேனென்றும் விளங்கவில்லை. கோவ லன்கண்ணகி செய்தியையும் கோயிலெடுத்ததையும் கூறவேண்டுவதே யன்றி தம் கால சரித்திரத்தையெல்லாம் விளக்குவதல்ல இளங்கோ வடிகள் கருத்து. பின்னர், சிலப்பதிகாரத்துக்கு முந்தியது மணிமே கலை யென்பதற்குச் சான்றொன்று மில்லையென்றார். சிலப்பதிகாரப்பதி கத்திற்கு முன்னுரை கூறுமிடத்து 'மணிமேகலை துறவினை...பெருங் காப்பியமாக முடித்தலைக்கருதி அடிகள் சாத்தனார்க்கு இவ்வுரையை யுரைத்துழி, அவர்மணிமேகலைபெயரான்...ஓர் காப்பியஞ் செய்த மைத்தனரென'ன்றதாக அடியார்க்கு நல்லார் கூறுகிறார். இதன்றியும், கண்ணகி வரலாற்றைச் சாத்தனார் கூறக்கேட்டு அதைச் சிலப்பதிகார மெனப் பெருங்காவ்யமாக 'உரைசாலடிகளருளமதுரைக், கூல

வாணிகன்சாத்தன்கேட்டனன்' (பதிகம் 10-1, 88-9). இவ்வாறே மணி மேகலையும் 'இளங்கோவேந்தனருளிக்கேட்ப, வளங்கெழுகூலவாணி கன்சாத்த'னாரால் பாடப்பட்டது (பதிகம் 95-6). மேலும், சிலப்பதி காரம் 'மணிமேகலை மேலுரைப் பொருண்முற்றிய'தெனக் கூறப்படு கிறது (கட்டுரை. 17-8). ஆகையால் சிறிதும் ஐயத்திற்கிடமின்றி மணிமேகலையே முந்திய நூலாம். சிலப்பதிகாரத்துக் காணப்படும் சாத்தனார் மணிமேகலையாசிரியரல்லவென்றார். ஆனால், மணிமேகலை யைச் சாத்தனார்பாட இளங்கோவேந்தன் கேட்டதால், இவ்விளங்கோ வும் சிலப்பதிகாரமியற்றியவராகார். ஆகவே, இளங்கோ, இருவர், சாத்தனாரும் இருவராவர். இது பொருந்துமா? இனி, மணிமேகலை கூறும் காலக்குறிப்புகளும் தவறென்றார். சுதமதியைப் பிரிந்து எழு நாள் சென்றதும் மணிமேகலை திரும்பவந்தாள் (மணி 11. 127-31). சுதமதியைப் பிரிந்தது 'இருள்கூர்ந்தவிடையிருள் யாமத்து' (6. 208). இடையிருள் யாமம் யாது? இதில் இருளென்றது இருட்டன்று. ஏனெனில், 'இருள்கூர்ந்த' என்றிவ்வரியிலேயே இருப்பதால் அது கூறியது கூறலாகும். ஆகையால் ஒளிமழுங்கல் அல்லது கருமை என்றே பொருள்கூறவேண்டும். இருளென்பது கருமையென்ற பொருளில் வந்திருப்பதை மதுரைக்காஞ்சியில் காணலாம் (634). கிருஷ்ணபக்ஷத்திற்குப் பேரிருட்பக்கம் என்றிருப்பதும் (சிலப். 23.133) கவனிக்கத்தக்கது. சுக்லபக்ஷமும் கிருஷ்ணபக்ஷமும் நிலவிருப்பதாலும் இருளிருப்பதாலும் பெயர்பெறவில்லை. இரண்டிலும் இருளுண்டு— பின்னிருளும் முன்னிருளும். ஆகையால் முன்னிரவில் முன்னதில் நாளுக்குநாள் ஒளிமிகுந்துவருவதாலது சுக்லமென்றும், மற்றதில் நாளுக்குநாள் ஒளிமழுங்கிவருவதால் அது கிருஷ்ணமென்றும் பெயர் பெற்றன. இவ்வாறே பகலில் ஒளிமிகுந்திருப்பதால் அதன்யாமங் கள் பகல் யாமங்களென்றும், இரவில் ஒளி மழுங்கியிருப்பதால் அதன் யாமங்கள் இருள்யாமங்களென்றும் பெயர்பெற்றன. இருள்யாமங்

கள் 4-ல், முதல்யாமம் தலையாமமெனவும், 4-வது யாமம் கடையாமமெனவும் கூறப்படுவதால், இடையிருள்யாமம் என்றது இரவில் 2-வது 3-வது யாமங்களை. அதாவது 9 மணிமுதல் 3 மணிவரையுள்ள காலத்தைக் குறித்ததாகும். சுதமதியைப் பிரிந்தபொழுது இவ்விடையிருள் யாமம் இருள்கூர்ந்திருந்ததாகக் கூறப்படுகிறது. இதன்பின்னர், மணிமேகலை மணிபல்லவத்தில் அமுதசுரபியைப் பெற்றநாள் புத்தர்பிறந்த வைகாசி விசாகநாளெனப்படுகிறது (11. 40-6). அன்றுதிதி பௌர்ணமியென்றார் நண்பர். இது தவறே. ஏனெனில், 'மதிநாண்முற்றிய மங்கலத்திருநாள்' என்றது புத்தர் ஞானம்பெற்றநாளையே குறித்ததென்பது அதன்பின் 'போதுவறிவிகழ்ந்து புலமுறுமாதவன்' (10. 83-5) என்றிருத்தலால் விளங்கும். ஆயினும், வைசாக விசாகம் பௌர்ணமியை அடுத்தே வருவதாலும், சுதமதியைப் பிரிந்தபின்னரே மணிமேகலை மணிபல்லவம் சென்றதாலும், இருள்கூர்ந்த இடையிருள் யாமம் என்றது பூர்வபக்க துவாதசிக்கு முன்பே வரக்கூடும். இனி மணிமேகலை திரும்பவந்தது 'ஏழ்நாளில்' (7-24) என்றும், 'ஏழ்நாளிலிடையிருள்யாமத்து' (7-106) என்றுமே கூறப்படுவதால், ஏழாம்நாளிரவு இடையாமத்தென்றே தெரிகிறது. அந்த யாமத்தில் இருளிருந்ததாகக் கூறப்படவில்லை. ஆகையால் சுக்ல ஏகாதசி இடையிருள்யாமத்துப் புறப்பட்டு, விசாகநாளில் அமுதசுரபியைப் பெற்று, ஏழாநாளிடையிருள்யாமத்துத் திரும்பவந்தாள் என்பது பொருந்துவதே. இருள்யாமமென்பதற்கு இருள்கூர்ந்த யாமமென்றே பொருள் கூறினும், சுக்ல ஏகாதசியன்று புறப்பட்டவள் ஏழாநாளில் பஹுள சதுர்த்தியன்றும் திரும்ப வரக்கூடுமாகையால், அன்றிரவும் இடையாமத்து இருளிருந்ததெனலாம். இவ்வாறு பொருள்கூறினால், மணிமேகலை சுதமதியைப்பிரிந்தது பௌர்ணமியை அடுத்துவந்த சித்திரை நாளில் இந்திரவிழவிற்குக்கொடியேறி சுமார் 25 நாட்கள் சென்றபின்னரும். சுதமதியைப் பிரிந்தது பூர்வபக்கத்திலென்பது 'அந்தி

மாலை நீங்கியபின்னர், வந்துதோன்றிய மலர்கதிர்மண்டிலம்' (6. 1-2) என்றதாலும் விளங்கும். 25 நாள்வரை ஊராரேச்சுரையை மாதவிநற்றாய் அறியாதிருந்திருக்கமுடியாதென்றும், அதை அவள் மாதவிக்குச் சொல்லியனுப்பாமலிராள் என்றும் நண்பர் கூறுகிறார். ஆனால் ஊராரேச்சுரை மாதவி ஆடலுக்கு வாராததைக்குறித்தல்லவென்றும், இவ்விழவிற்குமுன்னரே அவ்வுரை யெழுந்ததென்றும், சித்திராபதி அவர்களை ஆடலுக்கு அழைக்கவில்லையென்றும், அவ்வுரையைக்கூற வயந்தமாலையை விடுத்ததன்கருத்து 'தன்வழிப்படுத்தவும்,' இன்னும் விழவு 2, 3 நாட்கள்தானுள்ளது; இனியும் நாம் பேசாதிருந்தால், அவர் வாராதே விழவுமுடிந்துவிடு'மென்று இன்று வாராராயினும் நாளை வருவாரென்று நாள்தோறும் எதிர்பார்த்திருந்து அவர் 25 நாட்களாயும் வாராததுகண்டு துன்புற்ற சித்திராபதி அஞ்சியுமேயென்றும் தெளிவாம். இனி, மணிமேகலை மணிபல்லவம் போன மறுநாளே தன் தாயை அடைந்தாளெனவே காணப்படுகிறதென்றார். ஆனால், மணிமேகலை மணிபல்லவத்திலிருந்தது ஒருநாளே ஆயினும், புகாருக்குத்தெற்கில் 30 யோசனைக்கப்பாலுள்ள 'அத்தீவுக்குப் (மணி. 6. 211-3) போய் வருவதற்கு 6 நாட்கள்சென்றதாகச் சாத்தனார் கருதியிருக்கவேண்டும். இவ்வாறே சிலப்பதிகாரத்திலும், செங்குட்டுவன் நீலகிரியில் 1 ஆண்டு தங்கியிருந்தும், அவ்வளவுகாலம் தங்கியிருந்ததாகக் கூறப்படவேயில்லை. அவனே கங்கைக்கரை சேர்வதற்கு 1 ஆண்டுக்குமேல் சென்றிருந்தும், அவ்வாறென்றும் குறியாது, 'ஞாலமாள்வோன்... பாடியிருக்கை நீங்கிப்பெயர்ந்து, கங்கைப்பேரியாற்றுக் கன்னரிற் பெற்ற, வங்கப்பரப்பின் வடமருங்கெய்தி (26. 173-7) என்றே சிலப்பதிகாரம் கூறுகிறது. இனிக் கடைசியாக, மணிமேகலையின் நடையே அது பின்னூலெனக் காட்டுமென்றார். ஒரேகாலத்துப் பல புலவர்கள் பலநடைகளில் இயற்றுவதியல்பு. மேலும், சிறு பாடல்களுக்குரிய நடைவேறு, பெருங்காவ்யங்களுக்குரிய நடைவேறு. இதன்றியும் சமயக்கொள்கைகளை விளக்குவதும் சாத்தனார் கருத்தாதலால், மற்றச் சங்கநூல்களிற் காணப்படாத பல வடமொழிச்சொற்களை வழங்கவேண்டியதாயிற்று. அவைகட்கிணங்க, தமிழ்நடையையும் சிறிது மாற்றவேண்டியதாயிற்று. ஆகையால், இந்நூல் பின்னூலேயெனக் காட்டவேண்டுமாயின், சங்ககாலத்திற் றெரிந்திருக்கமுடியாத சொற்கள் பயின்றுள்ளன எனச் சான்றுதரவேண்டும்.

19. மற்றவை. கி. பி. 171 கயவாகுவின் காலத்திற்குப் பின்னுள்ளதென்றார். இது தவறு. ஏனெனில் நண்பர்கூறும் புத்தநிறந்தகாலத்தையே கொண்டாலும், கி. பி. 150-ல் பட்டமெய்திய கயவாகு 22 ஆண்டு அரசுபுரிந்ததால், அவன் கி. பி. 172 வரையிருந்தவனாவன். திங்கட்கிழமையும் அநுஷமும் பிரயாணத்திற்கு நல்லனவயல்லவென நான் கூறினேன் என்றார். இது தவறு. யான் கூறியது இவை நல்லனவையே ஆயினும், அந்நாளுக்குரிய யோகம் காலையிலிருக்கும் யோகமே; அதாவது திங்கட்கிழமையும் விசாகமும் சேர்ந்திருத்தலால், மரணயோகமே. ஆகையால், புறப்படும்பொழுது யோகம் நல்லதாயினும், அந்நாளில் புறப்படக்கூடாது என்பதே. திரு. சுவாமிக்கண்ணுப்பிள்ளை 4 மணிநேரத்திற்கப்புறம் வந்த நாசயோகத்தை அப்பொழுதாமென்று சொல்வதாகக் கூறினேனென்றார். இதுதவறு. நான்கூறியது 4 மணிநேரத்திற்கப்புறமும், மறுநாளும் வந்த நாசயோகம் பிரயாணத்தை எவ்வாறு பாதிக்குமென்பதே. இவ்வாறே, நண்பர் கூறுமாண்டிலும் புறப்படும்போது சனியும் விசாகமும் சேர்ந்திருந்ததால் சித்தயோகமாயிருக்க, மறுநாள் காலையிலிருந்த மரணயோகம் பிரயாணத்தைப் பாதிக்குமென்று பிழைபடக்கூறினார். இதன்றியும், பிறரைப்போல அடியார்க்குநல்லாருரையை நான் மேற்கொள்ளாததாலும், நூலில் மரணயோகத்தைப்பற்றி ஒன்றும் காணப்படாததாலும், இவ்வெதிருரையே வேண்டப்படாததாயிற்று. கி. பி. 157 ஆடி 29-ல் நாள்பொருந்தவில்லை யென்றார். இது தவறு. ஏனெனில், அன்று நள்ளிரவில் பரணியிருந்ததென நண்பரே கூறுகிறார் (ப. 206). அப்பொழுதிருக்கவேண்டியநாளுமதுவே எனக்காட்டப்பட்டது. பின்னர், அவர் கூறுமாண்டில் கோவலன்கண்ணகிபுறப்படும்போது வாரசூலையும் இருந்ததென்றார் (ப. 207). இதுவும் தவறே. ஏனெனில், மதுரை புகாருக்குத் தென்மேற்கில் இருப்பதால், வாரசூலையும் தென்மேற்கிலே இருத்தல்வேண்டும். ஆனால், அன்று சனிவாரமாகையால், வாரசூலை கிழக்கில் அல்லது வடமேற்கிலேயே (காலப்ரகாசிகா. 28. 43, 58-9). இனி, இவ்வாறு நான் மறுத்துக்காட்டாத அவர் கூற்றுரைகளெல்லாம் என்க்கும் உடன்பாடேயாமென வறிக. இச்சிற்றுரையில் பிழைகள் காணப்படுமாயின், அவைகளை எடுத்துக்காட்டியுதவும்படி நண்பரையும் மற்றுமுள்ள புலவரையும் வேண்டிக்கொள்கிறேன்.

கே. ஜி. சங்கர ஐய்யர்.

# ஐங்குறுநூற்றுத் திணைவைப்பு.

இஃது, புலத்துறை முற்றிய கூடலூர் கிழாரால் அளவு கருதித் தொகுக்கப்பட்டு அகத்திலக்கியமாகியதோர் நூல்.

(1) ஓரம்போகி (2) அம்மூவன் (3) கபிலன் (4) ஓதலாந்தை (5) பேயன் என்ற இவ்வைவரால் யாக்கப்பட்டுள்ளது. இவ்வைவரும் தம்மில் இணை-ஒத்த புலவர்கள்; தொகுப்பித்த சேரற்கும், தொகை செய்த கிழாருக்கும், அறிமுகமாயவர்களே; இவ்வைவர் பாடிய ஐந்திணையையும், கிழார், தம்துறைபோய் விரிந்த அறிவுளராக, ஓரம்போகியார்யாத்த மருதம் முதலாகப் பேயன்யாத்த முல்லையீறாகத் தொகை செய்தார். இத்தொகை நூலுக்கு ஆசிரியர் பெருந்தேவனார் கடவுள் வாழ்த்து யாத்தமைத்திருக்கின்றனர்.

இனி, 'நடுவண' தொழிந்த நிலம் நாலெனக்கொண்டு, ஐந்திணை காத்த தொல்காப்பியர் தம்முறைக்கண்ணே, அவற்றிற்கு முறை கூறுங்கால், "முல்லை குறிஞ்சி மருதம் நெய்தலென" முறை கூறிக் கொண்டு, 'இம்முறையே யன்றியும் சொல்லப்படும்' என்பது பட "சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே." எனச் சூத்திரம் செய்து சென்றனர். இவ்வும்மை இலேசு கொண்டே. கலியாதி பிறநூல்களினும் இந்நூலினும் வேறுபடத் திணை கோக்கப்படலாயின. இவற்றால், திணைமுறை வைப்புத்தான், யாதானும் தக்க காரணம்பற்றித் தமக்கு வேண்டியவாறு முடியும் என்பது ஆயிற்று.

ஆசிரியர் தாமுமே, திணை வகுப்புழி முல்லையை முதற்பெய்தும், உரிவகுப்புழிக் குறிஞ்சிப்பாலதாய புணர்ச்சியை முன்னிட்டுந் தம் உம்மை உட்கொண்டு செல்ப. முல்லையை முன்னிட்டுழி, 'அகத்திணையாவதில்லறமே நோக்கிற்றாகலின் இயற்கை முல்லையாகிய இல்லத்திருத்தல் (கணவற்பிழையாமை, நல்லறத்துணையாதல்) முற்படத்தொகுத்தார்' என உரைகூறிய ஆசிரியர் "புணர்தல் பிரிதல்" என்ற உரிச்சூத்திரத்து, 'அகப்பொருள்ஆவது புணர்ச்சியாகலின், அதனை முற்படப் பெய்தெழுந்தார்' என்று முறைகாட்டிச்செல்வர். இவற்றாலும், காரணந் தக்கனநாடித் திணைவைக்க என்பது தெளிகின்றாம்,

இவ்வாறாகவே, நமதுகிழாரும், தமது தொகைநூலில் மருதம் முதலாக முல்லையீறாகத் தொகைசெய்தார். இதற்கு, 'எம்முறைகரு தினர் என்பதே ஈண்டை ஆராய்ச்சியாகும்.

கிழார் கோத்தமுறை இதுவே; (வேறன்று) என்று துணியச் (1) சான்றோர்கள் இம்முறைமை மாற்றாமை இதுவரை யிருத்தலும்,

(2) உரை ஆசிரியர் ஒருப்பட்டுரைசெய்திருப்பதும்,

(3) "மருதமோரம்போகிநெய்தலம்மூவன்
கருதுங்குறிஞ்சிகபிலன்;—கருதிய
பாலைஓதலாந்தை; பனிமுல்லைபேயனே
நூலைஒதைங்குறுநூறு." என்ற

இவ்வெண்பாவுடன் கூடிச் சான்றாகின்றன. உரையாசிரியரோ, இம்முறை விளக்கிலர்; உரையே சுருங்க உரைத்துச்செல்வர்.

இத்தொகை செய்தார், 'புலத்துறை முற்றினர்.' எனச் சிறப் பிக்கப்படுவர்; புலமாவது நூல்கண்டறிந்த அறிவு; ஆகவே, இவர் செய்தமுறையும் நூற்றுறை யிகவாது நிற்றல்வேண்டுவதாயிற்று.

நூற்றுறையாவது, 'எல்லாப்பிறப்பினும் உயர்ந்ததாய மானுடப் பிறப்புற்றோர் யாவரும் ஒராங்கறம்புரிந்து பேறடைக.' என்பது எல் லார்க்கும் ஒப்பமுடிந்தது. ஆகவே, இக்கருத்துட்கொண்டே, கிழார் இது கோத்தார் என்க.

அதாவது, ஊடியும் கூடியும் இல்லிருப்பான் பின்னைப் பிறப்பறுக் கத் துறக்கவும்வேண்டும் என்பதுபடக் கோத்தார் காண்க.

இவ்வாறு புகாக்கால், இல்லறம் நிரம்பா வாழ்க்கையாய் இழி புறும் என்ப. தொல்காப்பியர் தமது பொருளதிகாரத்தில், அறிவும் அஃதே அளித்திடும்; என்னை? அநுபவம் முற்றிற்றானே வெறுப்பு? வெறுப்பும் உலகத்துப் பொருள்நிலையாமை உணர்வும் ஒன்றுகூடவே யன்றோ ஒருவர்க்குத் துறவுள்ளம் தோன்றிடூஉம்? ஆதலால், துறவு புகலே இல்லறமுடிவாகும் என்பது நிலையாயிற்று.

இங்ஙனம் துறவுநிலையாகவே மாந்தர் துறவுச்சேறல் இன்றியமை யாமையாய்க. வானப்பிரஸ்தமும் சந்யாசமுமே துறவு.

இக்கருத் தொலிப்பவே, இதன் கடவுள்வாழ்த்தும் அமைந்திருப் பதைக்காண்க.

(1) அகப்பொருளாவது புணர்ச்சி ஆகலான், புணர்ச்சியை நடுவிட்டார். 'நடுவணது எய்தின் இருகடையும் எய்தும்' என்ற முறைத்தக நாற்றிணைக்கண்ணும் நிகழும் என்பதும், இஃதுபற்றியதே இவ்வகத்தொழுக்கம் என்பதும், இஃதுதான் மகளிரது இயற்கை முல்லைக்கு ஆதாரமாவது எனவும் போதர இங்ஙனம் இடைப்படுத்தாராயிற்று.

(2) பின், இவ்வொழுக்கமெல்லாம் இல்லிருந்து அறஞ்செய்தலைக் கருதியது. ஆகலின், அக்கருதப்படுபொருளை, "சிறப்புறு பொருளைப் பிற்படக்கிளத்தல்" என்றாங்குக் கருதப்படுபொருளாக ஈற்றுக்கண்பெய்தார். 'சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே' என்பஃதால், இல்லிருந்து அறமாற்றி உலகுநிலையீதென்று உணர்ந்து வெறுப்புளத்தராய்க் கிழவியும் கிழவனும் துறவடைதலானே இல்லறம் நிரம்புதலடையும் என்பதுபட ஈற்றுப்பாலதாக முல்லையைப்பெய்தார். இம்முல்லைதான் புணர்ச்சியை இன்றியமையாதது என்பதால் குறிஞ்சிப்பின் இஃதை இட்டுத்தொகுத்தார். அல்லாது வேறுபடத் தொகைபெற்றால், இல்லறம் நிரம்புதல் இன்றிப் பிறழக்கூறியதாக ஒலிக்கும்; ஒலிக்கின், ஆசிரியர்கூற்றுப் பயனிலதாய் முடியும். எனவே, "சிறந்தது பயிற்றல்" என்னும் இலக்கணமுண்மையின் இங்ஙனம் கோத்தார் ஆயிற்று. (இத்துறவு அகப்பொருட்டாதல் தொல்காப்பியம் பொருளதிகாரம் 430-ம் பக்கம் காண்க.)

(3) புணர்தல்கூறி நல்லறமாற்றி இல்லிருத்தல் பெற்றபின் துறவறம் புகுபஎன்பதால், அப்பொழுதே, சிறந்ததற்குத்தக்க நூலோதல்வேண்டும்; இம்மையில்லறம்சிறக்கப் பொருள்தேடல்வேண்டும்; இவ்விரண்டும், புணர்ந்து இல்லிடை நிலைத்தலால் எய்தப்படாதன. பிரிந்தே பெறப்படுப. என்பதும் புணர்ந்தார் பிரிந்தே சேர்ந்து இல்லிருந்தறமாற்றித் துறவுப்போதுப என்பதும்படக் குறிஞ்சி பாலை முல்லைஎன முறைப்படுத்தாராயிற்று.

(4) பின், கூட்டத்துக்கு இன்றியமையாததாய் கூட்டத்தை யணிபெறுத்துவதாய் நிற்கின்ற ஊடலை முதற்பெய்தார். (மருதமாவது, ஊடியும் கூடியும் போகம்நுகர்தல்.)

(5) ஊடலும் இரங்கலும் ஒப்புடைமையற்றி மருதமொடு நெய்தலையிட்டார். ஒப்புஆவது, இரண்டும் பெரும்பொழுது ஆறும் பெறுதலும், பரத்தையிற் பிரிவுபோலப் பிரிவு ஒப்பு உடைத்தாதலும், பருவரல் உடைத்தாதலும் ஆம்.

இனி, இவ்விரண்டும் பெரும்பான்மை தலைவிக்கே உரியஎன்பதால், இங்ஙனம் இட்டார் எனலும் அமையும். எனிற் பயம்யாதோ? என்றக்கால், இவ்வாழ்வு முற்றிலும் தலைமகளை முன்னிட்டதே என்பது போதரலாயிற்று. "இல்லில்லார்க்கு இல்லை ஏறுபோற்பீடுநடை" என்பதும், 'இல், இல்லக்கிழத்தி, மனைவி, மனை' என்றற்றொடக்கத் தலைமகள் பெயர்களும், இவ்வுண்மையைச் சிறப்பித்தல் காண்க. இது விரிப்பிற்பெருகும்.

இத்தொகையால், ஊடியும் கூடியும் இல்லிருக்கும் மாந்தர், வெறும்புணர்ச்சி மாத்திரைத்தே இல்வாழ்வு, அன்றித் துப்புரவெய்தி நுகர்தன்மாத்திரத்தே என வீணாள்கழியாமை மானமழியாத பொருடேடி ஒப்புரவாற்றியும், சிறப்புறு நூல்களை ஓதியும், விருந்து புறந்தராலாதி ஒழுக்கம் பிழையாதியற்றியும், இற்சிறப்பெய்தியபின்னைத் துறவுளத்தராய் ஈசனையடைந்து தோற்றரவு இசந்து பேறு அடைக என்ற நூற்றுறைக்கோளது தெரிவுறுத்தாராயிற்று.

அசப்பொருட்டாயநூலுட் டிணைநிலைவைப்பீதாகிற் பொருள் ஒழிந்து, பிழையாதோ? எனிற், பிழையாது என்க. என்னை? அகம் புறம் என்று பொருட்பாகுபாடுசெய்த ஆசிரியரே 'சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே" என அகத்திணை யியலுட்கூறிச் செல்வதால், இஃது ஒருதலையான் வேண்டப்படுவதாயிற்று. அகத்தொழுக்கம் நிலையாமை துறவு ஏற்படல் அரிதெனது மூலகியலே இதற்குத்தக்க சான்றாகின்றது. இன்னும், இன்னோரன்னவற்றால் இது பிழைபாது என்க.

பின்னை கூடலின்பின்னன்றோ ஊடல்; அவ்வாறாக, ஊடற்பின் கூடல் எவ்வாறெய்தும்? எனச் சிலர்கூறலாம். 'ஊடுதல் காமத்துக்கு இன்பம்' (கூட்டம், கூடல்) என்ற குறள்வாக்கும், இயற்கைப் புணர்ச்சிப்பின்னே, அகத்தொழுக்கம், அஃதினே ஊடலும், உணர்த்தலும், கூடலும், பிரிதலும், இரங்கலும், இருத்தலும் நிகழும், என்ற ஆசிரி

யர்கோளும், "ஊடவிறுதிக்கட்கூடல் ஒருதலை" என்ற சிவஞான முனிவர் கூற்றும், நானுகர்வும் கண்டு அது கூடாவன்மை காண்க.

ஊடலே நெய்தல் கூடல் பிரிவென நிரலே நிறுத்தியதொகையால் ஊடிக்கூடலும், பிரிந்திரங்கலும் என்பது பெறுக. பின்வந்திருத்தல் முல்லை. இதனால், ஊடல் கூட்டத்தாலும், கூட்டம் பிரிவாலும், பிரிவும் பருவரல் உற்று இரங்கலும் இருத்தலாலும் அழிவடையும் என இவ் வைந்தின் நிலையாமையும், வைகுறுமுதலா மாலையீறுக் காட்டிய தொகையால் நாளது இன்மையும் தெளித்து, இவை சுழன்றுவருதலே அகத்திணைத்தாய இல்வாழ்க்கை என்பது காட்டி, நுகர்ந்து இட்டுக் கழிப்பிபபின்னைத் துறவுபுகுந்து பேறடைக என்பதும் அறிவுபடக் கோத்தமை யறிக.

நூலாவது, அறம்பொருள் இன்பெனும் முப்பொருள் தருவதன்றே? ஆதலால், புணர்ச்சி இன்பம்; பிரிந்து இல்லறமாய புரந்தரல். விருந்தோம்பல், ஈகை இவை குறைவற நடத்துவான். சென்று தேடிவரும் பொருளும் பொருள்பெற்றுச்செய்யும் இல்லறமும் என மூன்றும் இந்நூல் தரல்காண்க. இப்பொருள்படக் கிழாரும், குறிஞ்சி பாலை முல்லை என்று கோத்துள்ளார் ஆயிற்று. வீடு துறவால் கூறப்பட்டது.

'வீடன்றே விளம்பப்படாப்பொருள்' ஆகலிற் காண் அது நூலுள் விள்ளப்படாது புறத்தே ஒலிக்கத் தொகைசெய்ததும் என்க.

இவற்றால்,

"ஊடலே நெய்தல் உளமுருகிக் கூடலே
சென்று பிரிதலுடன் வந்திருத்தல்—பின்னை
அறமாற்றி யான்ற துறவடைதல் ஆவதே
கூடல்கிழார் கொண்ட தொகை." என்று துணிக.

S. RANGAN,

30th Sep. 1918.

# புத்தகமதிப்புரை.

(1) பட்டபாண சரித்திரம்:—(ஹர்ஷ சரிதத்தின் முதற்பாகம்) இது, கும்பகோணம் இராஜாங்க கலாசாலையின் பிரதான ஸம்ஸ்கிருத பண்டிதர் அபிநவபட்டபாண ஸ்ரீ. உ. வே. ரா. வே. கிருஷ்ணமாசாரியரால் வடமொழியினின்றும் தமிழ்நடையி லெழுதப்பட்டது. இதற்குக் கும்பகோணம் ராஜாங்க கலாசாலைத் தலைமைத் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீ. உ. வே. ம. வீ. ராமாநுஜாசாரியரால் முகவுரை எழுதப்பட்டிருக்கிறது. இதன் ஆக்கியோரெழுதிய முன்னுரையால் அவர்களுக்குள்ள ஸம்ஸ்கிருதபாஷையின் அபாரயோக்கியதையும். இதன் பிரயோஜனங்களும் இதன்முதனூலின் சொற்பொருளமைதியின் அருமையும் நன்கு அறியலாகும். சிறந்தபண்டிதர்களா லெழுதப்பட்ட வசனகாவியங்களே நடுத்தரக் கல்விகற்பார்க்கெல்லாம் மிகப்பயன்படத்தக்கன. அத்தகைய காவியங்க ளிக்காலத்தில் மிகச்சுருங்கியுள்ளன. அவற்றைப் பெருக்கவேண்டிப் பலரும் தம்நெஞ்சுக்குத்தோன்றியபடி புதிது புதிதாயெழுதி வெளியிடுவதைவிடக் காவியாலங்கார நாடகங்களிற் கைதேர்ந்த வடமொழிப்புலவரெழுதிய வசனநடைகளை வழுவறமொழிபெயர்த்துக்கொள்வதே சிறந்ததாகும் என்பதை இப்புத்தகம் படிப்பதாலறியலாம். இப்புத்தகத்திலுள்ள விஷயங்களால் படிப்பவர்களுக்கு உலகியலறிவும், காவிய நடையறிவும், ஒழுக்க நடையறிவும் உண்டாவதோடு பல வேறு சந்தர்ப்பங்களையும் அதனதன் சுபாவநிகழ்ச்சி தோன்ற வருணித்து வியாசங்களெழுதவல்ல ஆற்றலும் உண்டாகுமென்று தோற்றுகின்றது. இன்னும் தமிழ்நடை சிறக்குமாறு மேன்மேலு மிவ்வாறான புத்தகங்களை யெழுதி வெளியிடும்படி இஃதெல்லோராலு மாதரிக்கத்தக்கதே. இதன் விலை அணா 10.

வேண்டுவோர் ஆக்கியோரிடம் பெறலாம்.

(2) ஆழ்வார்கள் சரித்திரம்:—இது, கே. டி. ஸ்ரீமான் சுந்தரராஜாச்சார்யர் (பி. ஏ., எல். டி.) இயற்றியது. இதிற் பொய்கையார் முதலிய ஆழ்வார்களுடைய சரிதங்களும், அவர்களியற்றிய பிரபந்த முதலியனவும், யாவருமெளிதி லறியும்படி தெளிவாயெழுதப்பட்டுள்ளன. இதன் விலை அணா 12. வேண்டுவோர் ஜி ஏ. வைத்தியராமன் கம்பெனி, மதராஸ். என்ற விலாசத்துக்கு எழுதிப்பெறலாம்.

(3) பாரஸீக ரத்நங்கள் :—இதுவும் ஜி. ஏ. வைத்தியராமன் அண்ட் கம்பெனியிற் பதிப்பிக்கப்பட்டது. இதிற் பலவிஷயங்கள்பற்றிய 36 சிறியகதைகளடங்கியுள்ளன. இதன் விலை அணா 4. வேண்டுவோர் மேற்கண்ட விலாசத்திற் பெறலாம்.

பத்திராதிபர்.

# தொல்காப்பியமும், மயிலைநாதருரையும்.

"சகரக்கிளவியும் அவற்றோரற்றே
அ ஐ ஔ வெனு மூன்றலங்கடையே."

என்னும் தொல்காப்பியச் சூத்திரவுரையில் உரை யாசிரியர், சாலே சிலே என்னும் வடசொற்களைத் தமிழ்ச்சொற்களாகக் கருதிக் கூறியதன்றியும் அவர் சகடமெனவும் சையம் எனவும் வருமாலெனின் அவற்றுள் ஆரியச் சிதைவல்லாதன "கடிசொல்லில்லை" என்பதனாற் கொள்க என்பதுங் கூறினர். மேலும் "கடிசொல்லில்லை" என்னும் சூத்திரம் புதியனவாய்ப்புகூஉம் தமிழ்ச்சொற்கட்காதலேக்கருதாது சையமெனவும் சகடமெனவும் காட்டினர்.

"கடிசொல்லில்லை" என்னும் சூத்திரவுரையில் வடநூற்கடலை நிலேகண்டுணர்ந்த சேனவரையரும் சம்பு என்னும் வடசொல்லைத் தமிழெனக்கருதிக் காட்டினர்.

உச்சிமேற் புலவர்கொள் நச்சினர்க்கினியரும் அச்சூத்திரக்குறிப்பைக் கருதாதும் பிறரையும் மறுத்துச் சகடமென்னும் சொல்லைத் தாமும் காட்டினர்.

நன்னூற் பழயவுரைகாரராகிய மயிலேநாதரும் வடசொற்களையும் பிறசொற்களையும் தமிழ்ச்சொற்களெனக் கருதிக்கொண்டு ஒரு நவீன மேற்கோள்காட்டிச் "சம்முதலனவை" என்றார்.

அவர் பின்னரும் ஆசிரியர் தொல்காப்பியனார் 'குற்றியலுகரம் முறைப்பெயர் மருங்கின் ஒற்றியநகரமிசைநகரமொடு முதலும்.'' என்றதை "நுந்தையுகரம்" என்ற தலேக்குறிப்பமைந்த நவீன

வெண்பாக்கொண்டு அப்பெயர் முதலில் உயிர்முதற்கண் வரவில்லை என்று மறுத்தார்.

ஆசிரியர் தொல்காப்பியர் "நகரமொடு முதலாகும்" என்றானன்றி வேறு கூறினரல்லர்.

நு என்பதில் நகரம் எண்ணப்படாமையானும் அளவு பெறுமையானும் மெய் யுயிரெனப்படாமையானும் இடையீறென்பவைகளுள் ஒன்றையேனும் கூறவொண்ணாமையானும் உகரமே முற்றவொலித்து நிற்றலானும் பிறவாற்றானும் அதனையே முதலெனக்கொள்ளலும் தவறாகாது. இவ்வாறு ஆசிரியர் தொல்காப்பியனாரை யுள்ளிட்டாரனைவரையும் நிந்தித்துரைத்த மயிலைநாதரை முன்னோரிடத்தில் அன்பும் நன்குமதிப்பும் உள்ளவரென்று கொள்வதெப்படி? இன்னும் முன்னோருரைகளிற் குறைகூறும் இயல்புடையாரும் திராவிட பாடிய கர்த்தரும் துறைசையாதீனசிரோன்மணியும் ஆகிய சிவஞானஸ்வாமிகளிடத்தே உட்பற்றின்மையும் இவ்வாக்கியங்களாலேயே தெள்ளிதிற் புலப்படும். மேலும் இச்சூத்திரங்கட் கின்றியமையாதனவற்றை எமது "தொல்காப்பியமும் பிற்காலத்தாரும்" என்ற விஷயத்தொடர்ச்சியில் அமையும் இடங்களிற் செவ்வென் விளக்கிக்காட்டுதும்.

இங்ஙனம்

K. S. நவநீதகிருஷ்ண பாரதி,

தலைமைத் தமிழ்ப்பண்டிதன்,

இராமநாத வித்யாசாலை, சுன்னாகம்.

18th Aug. 1918.

சிவமயம்.

# நல்லிசை நாற்பது.

## காப்பு.

(நேரிசை வெண்பா.)

அந்தா மரையயனு மச்சுதனுந் தேடரிய
பைந்தா ரிதழிப் பரமசிவன்—றந்தகரி
மாமுகத்துப் பிள்ளை மலரடியை வந்தித்தே
நாமகத்து வைப்பாம் நயந்து. 1.

வாரணத்தின் பாதமலர் வந்தித்து நாமகத்தில்
ஆரவைத்துக் கொண்டா லருளுண்டாம்—பாரகத்தில்
எல்லா நலனு மினிதமையு மெஞ்ஞான்றுஞ்
செல்வாக்கு முண்டாஞ் சிறந்து. 2.

## நூல்.

தங்கமலை வெள்ளிமலை தக்கமனை மக்களொடு
சங்கரனார்க் கேற்றவெலாந் தாமிருக்க—அங்கவரேன்
பிச்சைக்கு நாடிப் பெருமோடுங் கைப்பிடித்து
நச்சிவெளி வந்தார் நவில். 1.

ஒருமான் முடிமே லொருமான் கரத்தில்
அரைமானும் பாகத் தமர்ந்தால்—பெருமான்
வருமானங் காணுமோ மற்றவரைக் காக்க
இரவாதென் செய்வா னிருந்து. 2.

ஆதி சிவனா ரழல்விழியி லோர்பாதி
பாதி யுமையாட்கும் பங்குண்டே—நீதிகெடச்
செப்பரிய மன்மதனைச் சேணறியச் சுட்டபழிக்
கெப்படிப்பங் கின்று மியம்பு. 3.

பாலன் சுவைக்கறியிற் பங்குதவி னானில்லை
ஆலத்தும் பங்கில்லை யானதனால்—சேலொத்த

கண்ணுமையாள் கட்பழியிற் காற்கூறுங் கைக்கொள்ளற்
கெண்ணுவளோ பேசும்போ மெழுந்து. 4.

நாவிருத்தி மார்பிருத்தி நற்பாகத் தேயிருத்தி
மூவ ரிருத்தியதேன் மொய்குழலார்—சேவித்துப்
போனார் புலவர் தவத்தர் புகழடியார்
ஆனா ரவர்ப்பின் னடுத்து. 5.

வேதன் சிரமிழப்ப விண்டாழி வாய்துயில
நாதன் பலிக்கு நடந்தக்கால்—மாதர் தாம்
என்செய்வர் மீகாம னில்லா மரக்கலங்கள்
பின்செல்லு மோநெறியிற் பேசு. 6.

பிரமன் பெரும்படைப்பி லொன்றும் பிழைபோய்ப்
பரமன் முடிமேற் பதிந்தால்—பரமன்
முடியறியா தவ்வேதன் முன்னனத் தேறி
நெடிதலைந்த தென்னே நிகழ்த்து. 7.

கங்கை பரவக் கடியரவு மேசூழ்க்
கொங்கிதழி மூடிக் குவிந்திட்டால்—சங்கரன்றன்
வண்ண முடியும் மறையாதோ மற்றதனைக்
கண்ணுறவும் போமோ கணித்து. 8.

விடையிற் சிவனேற வெண்கதிர்சென் றன்னோன்
சடையேறிக் கொண்ட தரமென்—நடைவழியில்
வெங்கதிரைத் தாங்கிவர வேறுகுடை யில்லாத
பங்கத்தா லாமோ பகர். 9.

பித்தன் பெரும்பித்த னென்றுலகோர் பேசுமொழி
அத்தை மறுத்திங் கவிர்மதியான்—வைத்துள்ளேன்
என்று பரம னியம்புமுறை போன்மதியைத்
தன்றலைமேற் கொண்டான் றரித்து. 10.

ஆட்டுக்கா லைத்தூக்கி யந்தகற்கு விட்டெறிந்த
மாட்டுக்கா ரப்பையன் மாதேவி—காட்டிற்போய்
ஆனைக்கன் றொன்றை யவசரத்திற் பெற்றாலின்
றானத்தே வைத்தா டணித்து. 11.

வருவா னொருகுமரன் வள்ளிக்குப் பின்னே
திரிவா னவளைத் திருப்ப—வெருவானைக்

கன்றொன்று வேண்டிவரு மென்றே கணித்துமையாள்
அன்றுபெற்று வைத்தா ளறி. 12.

கங்கையைமுன் கட்டியவன் கங்கையைப்பின் கட்டற்கே
மங்கைதரு பிட்டெல்லாம் வாங்கியுண்டு—பங்கடையாப்
பேதத்தா லம்ம பிரம்பி னடிவாங்கி
வாதைப்பட் டன்றொளித்தான் மன். 13.

காட்டி னரியைக் கவினப் புரவியெனக்
கூட்டிக் கொடுபோந்து கொற்றவன்முன்—காட்டி
விகடங்கள் செய்தால் விளைபழிகள் போமோ
சகடங்க டாமே தரும். 14.

வாவிக் கரையிற் றவமாற்று மாதரசைத்
தாவிப் பிடித்துத் தவங்குலைத்த—பாவத்தைக்
கேட்டார் நகையாரோ கிட்டிவரு மப்பழிதான்
ஓட்டெடுத்தாற் போமோ வுரை. 15.

பிச்சைக்குச் சென்றுழைப் பேய்தொடர்ந்த வாறேபின்
நச்சித் தொடர்முனிவர் நாரியர்தம்—அச்சத்தால்
தஞ்சம் புகவேண்டித் தன்மாதைச் சார்ந்ததன்றி
வஞ்சித்தா னன்று மகிழ். 16.

தசையி னசையாற் றனிப்பன்றி பின்போய்
விசையனடி யுப்பட்டான் மேலோன்—பசிதான்
மலைமாணி னோர்பாதி வாய்மடுத்து மையோ
நிலையான தென்னே நிகழ்த்து. 17.

அந்தக் கடுவிடத்தை யங்நாளி லுண்டக்கால்
முந்துங் கனலோங்கி மூளாதோ—சந்தித்த
ஏனத்தை வீம னிளவல் கொளவிட்டுப்
போனக்கா லுண்டோ புகழ். 18.

வீசி வலைகொண்டு மீன்படுக்கு மச்சிவன்மேல்
நேசங்கொண் டம்மை நெறிமடக்கி—மாசகறன்
கண்ணைக் கணையைக் கயலென்று காட்டிமயல்
உண்ணிறையச் செய்தா னுவந்து. 19.

அவ்வா றவனை யவள்மடக்கிக் கூடாளேல்
எவ்வா றுலக மிதங்கண்டு—செவ்வாறாய்

இல்லக் கடனிறுக்கு மெல்லாரு முத்திநெறி
செல்லற்கென் ணுரோ திரண்டு. 20.

அன்பர்க்கு வீடுதவு மாதி சிவன்றனக்கு
முன்பொருவீ டின்றி முகில்மேயும்—பொன்பொருப்பிற்
சென்றிருந்தா னங்கதனைத் தென்னிலங்கை ராவணன்போய்
அன்றுபறித் திட்டா னசைத்து. 21.

பத்துத் தலையுடையான் பத்திரண்டு கையாலு
மெத்துக்கு வெற்பை யெடுத்ததெனில்—பித்தேறி
மண்விழுவ னுயின் மடிவ னுமைவாய்க்கும்
மண்விழுமா மென்றே மதித்து. 22.

நல்ல வரங்கேட்டு நாடிவந்த ராவணற்கோர்
கல்லை யிலிங்கமெனக் கைக்கொடுத்துச்—செல்லுகையில்
மைந்தனையு மேவி வழிப்பறித்தா னிவ்வகைத்தே
அந்தவரா னுற்று மறம். 23.

பிச்சை யெடுத்துழலும் பித்தனுக்குப் பின்னேடிப்
பிச்சைதா வென்றூற் பெறுவதுண்டோ—மெச்சுந்தன்
பல்லைக்காட் டாமற் படாடவிக் கோர்துணையாய்க்
கல்லைத்தந் தானுங் கணித்து. 24.

நள்ளிரவிற் றூது நடந்த சிவனரின்
கள்ளத் தனமெல்லாங் கண்டீரோ—துள்ளிப்போய்க்
கையோலை காட்டிக் கடிமா மணந்தடுக்கப்
பொய்யுரையுஞ் சொன்னார் புனைந்து. 25.

தந்தைதாய் சுற்றந் தனக்கில்லாத் தாழ்ச்சியினல்
எந்த வகையு மிடும்பிசைத்துச்—சொந்தமெனக்
கொண்டா னெருசிறையைக் கூருநகைக் கோர்வெட்க
முண்டாவ தில்லென் றுணர். 26.

தக்கன் றனையடக்கத் தக்கவலி யில்லாமல்
மிக்கபுகழ் வீரனைமுன் விட்டானே—முக்கண்ணன்
மாமற்குச் செய்யும் வரிசை யிதுவானு
லேமற்றோர்க் கென்ன மியம்பு. 27.

தன்மருகன் கூழுக்குத் தானிரத்தல் கண்டிருந்தும்
பின்பவனை நீக்கிப் பிறர்க்கெல்லா—மின்பமிகக்
காட்டி யவிப்பாகங் கையளிப்பி னம்மருகன்
கேட்டிருப்ப னாமோ கிளத்து. 28.

பல்லுக் கிதமாய்ப் பலதசையு மூட்டிவரு
வில்லுக்கை வேடன் விழிபறித்தான்—சொல்லக்கேள்
செய்நன்றி கொல்லுஞ் சிவனுக்கெக் காலத்து
முய்வுண்டு கொல்லோ வுரை. 29.

கண்ணனைமுன் னோர்மலர்க்காய்க் கண்பறிக்க வைத்தவனென்
றெண்ணாமல் வேட னிறைச்சிகொடுத்—துண்ணென்றால்
தீமை விளையாதோ தீயவரைக் கொண்டாடிற்
சாமளவுஞ் சஞ்சலமே தான். 30.

பொய்யில் பரமனுக்குப் பூவாடை கோடியுண்டு
வெய்யில் குளிர்பனிக்கு மேலாடை—கையிலை
அத்தாற் கரியுரியை யன்றெடுத்துப் போர்த்துலகில்
வைத்தானே பொல்லா வசை. 31.

கரியி னுரிபோர்த்த காரணத்தை முற்றுஞ்
சரிநீ யறிந்திலைச் சாற்றின்—உரியுரிய
முன்னாளிற் பட்ட வடித்தழும்பை மூடற்காய்
இந்நாளிற் செய்தா னிது. 32.

மொய்குழலாள் தன்னுடனே முன்பாடு சூதுதனிற்
பொய்யுரைக்க மாலுக்குப் புத்திசொல்லி—வையமிசை
பாம்புருவம் பெற்றுப் பரதவிக்க விட்டானே
சாம்பசிவன் செய்கையிது தான். 33.

மைந்தனொரு சப்பாணிப் பிள்ளை வடதருக்கீழ்
வந்திருந்தா னோர்துணையும் வாய்க்காம—லிந்தவகை
மாமனையே காவற்கு மற்றவன்பா லுய்த்தனனாங்
காமனையே சுட்டான் கணித்து. 34.

என்னவரங் கேட்டாலு மில்லையென்று சொல்லாமல்
முன்னுதவிப் பின்பறிப்பான் முக்கண்ணன்—அன்னவன்பால்
பெற்றபுகழ்ச் சூரன் பெருவரங்க ளெல்லாம்போய்
அற்றவகை யென்னா மறை. 35.

இல்லைப்போ வென்று விரக்கத்தான் போமிடத்துஞ்
சொல்லதையே எல்லவருஞ் சொல்வரென—மெல்லவரன்
எவ்வாமு முன்னீர் திரக்கு மியல்புதனால்
அவ்வரமீட் டேற்பா னடுத்து. 36.

மன்றல் வளங்காண வந்தவரி லோர்முனியைத்
தென்றிசைக்க ணோட்டிச் செலுத்தினனே—குன்றெடுத்து
வில்லாகச் செய்த விமலற் கிதுவழகோ
சொல்லாரச் சொல்லீர் துணிந்து. 37.

அந்தமுனி யேழ்கடனீ ரள்ளிக் குடித்தபெரும்
உந்தியினன் மன்ற லுணவெல்லாந்—தந்திரமாய்த்
தின்றிடுவ னென்றேங்கித் தென்றிசைக்குய்த் தான்சிவனுந்
தன்றிசையைச் சாட்டாய்ச் சரித்து. 38.

மங்கலஞ்சே ரின்ப மணக்கோலம் பூண்டவொரு
நங்கை நறுங்குழலை நாடிப்போய்ச்—சங்கரனார்
கொய்வித் தெடுத்தார் குடிப்பிறந்த நல்லவர்கள்
செய்விப்ப ரோவிச் செயல். 39.

தன்மகடன் றூலிபறத் தர்ப்பகனைக் கூசாமல்
முன்னெரித்தோ னுறையும் மொய்கூந்தல்—தன்சடையைப்
போன்முறுகும் பாம்பு புகுந்துகுடி கொள்ளுமெனத்
தான்களையச் செய்தனனும் சம்பு. 40.

## வாழ்த்து.

வாழ்க மகிதலமே வாழ்கவென வாயார
வாழ்வுரைக ளுமிசைப்பின் வாழாதோ—வாழுமெனில்
நீடூழி நீடூழி நீடூழி வாழ்கவெனப்
பாடிவோ மென்றும் பரிந்து. 1.

வாயார நாமினிய வாழ்த்துபல சொன்னாலுந்
தாயான மூர்த்தி தயவின்றேல்—வாயாவாம்
மற்றவனை முன்னேத்தி வையகமே வாழ்கென்று
சொற்றனமே யுள்ளந் துணிந்து. 2.

ச. பூபாலபிள்ளை.